நித்ரா 2025 காலண்டர்

GET IT ON Google Play

Download on the App Store

நித்ரா காலண்டரின்

ஜோதிட மலர்

ஆன்மிக தேடலின் புதுமை !!

மார்கழி மாத ராசி பலன்கள்

மார்கழி 01 முதல் 29 வரை



No.1 நித்ரா காலண்டர் வழங்கும்

மகத்துவம் நிறைந்த

மார்கழி மாதம்..!!

NITHRA APPS

Nithra Apps India Private Limited



பொருளடக்கம்



01.	மார்கழி மாதத்தின் வரலாற்று சிறப்புகள்	01
02.	தோஷங்களை போக்கும் மார்கழி மாதம்..!	02
03.	மார்கழி மாதத்தில் செய்ய வேண்டிய வழிபாடுகள்!..	04
04.	மார்கழி மாதம் பற்றிய தவறான அபிப்ராயம்!!...	06
05.	ஆண்டாள் ஓர் அறிமுகம் !!	08
06.	திருப்பாவை பிறந்த கதை!..	11
07.	மார்கழி மாத முக்கிய விரதங்கள் ..!	12
08.	மனநிம்மதி கிடைக்க ஆண்டாளை வணங்குங்கள்..!	17
09.	திருப்பாவை சிறப்பு..!	19
10.	திருப்பாவையின் பாசுரங்களின் அர்த்தங்கள்..!	21
11.	மார்கழி அஷ்டமி விரதம்..!	23
12.	பெண்களுக்கு ஸ்பெஷலான மார்கழி மாதம்...!!	26
13.	மார்கழி மாதத்தில் கோலம் போடுவதன் சிறப்புகள் !!	28
14.	மார்கழி மாதத்தில் பிள்ளையார் பிடித்து கோலம் போடுவது ஏன்?!!	31
15.	என்ன கோலம் போட்டால் என்ன பலன் கிடைக்கும்!!	32



பொருளடக்கம்



16.	மார்கழி மாதத்தில் ஏன் திருமணம் செய்யக்கூடாது?	33
17.	சிரஞ்சீவியான அஞ்சனை மைந்தனின் ஜெயந்தி...!!	35
18.	வைகுண்ட ஏகாதசி..!	38
19.	திருவாதிரை விரதமும், ஆருத்ரா தரிசனமும்..!	40
20.	மார்கழி மாதத்தில் என்னென்ன செய்யலாம்? என்னென்ன செய்யக்கூடாது?	44
21.	மார்கழி மாதத்தில் பிறந்தவர்களின் குணங்கள்!	45
22.	மார்கழி மாத சுப தினங்கள்	48
23.	சந்திராஷ்டம தினங்கள்	50
24.	மார்கழி மாத விரத தினங்கள்	52
25.	மார்கழி மாத ராசிபலன்கள்	54



மார்கழி மாதத்தின் வரலாற்று சிறப்புகள் !!

குளிர் காலத்தின் துவக்கமாக, மார்கழி மாதம் கருதப்படுகிறது. மார்கழி மாதத்தை சைவர்கள் தேவர் மாதம் என்று குறிப்பிடுவர். அதாவது கடவுளை வழிபடும் மாதமாகும்.

மார்கழி மாதத்தில் நிகழ்ந்த சில புராண நிகழ்வுகள் :

மகாபாரத யுத்தம் மார்கழி மாதத்தில் நடைபெற்றதாக புராணம் கூறுகிறது.

திருப்பாற்கடல் கடையப்பட்டதும், முதலில் விஷம் எழுந்ததும், சிவன் அதனை உண்டு உலக மக்கள் அனைவரையும் காப்பாற்றியதும் மார்கழி மாதத்தில்தான்.

இந்திரனால் பெருமழை பெய்து வெள்ளம் உருவாக்கப்பட்டு கோகுலத்தில் அனைவரும் துன்பப்பட்டபோது, கோவர்த்தனகிரி மலையை, கிருஷ்ணர் குடையாகப் பிடித்து மக்களை காப்பாற்றியதும் இந்த மார்கழி மாதத்தில் தான்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டாள் நாள்தோறும் வைகறையில் எழுந்து ஒவ்வொரு பாசுரமாகப் பாடி, திருமாலை திருப்பாவையால் திருவடித்

தொழுது, திருமணம் புரிந்ததும் சிறப்புமிக்க மார்கழி மாதத்தில் தான்.

மார்கழி மாத அதிகாலைப் பொழுதில், மக்கள் அனைவரும் காத்திருந்து அம்மையப்பன் அருள்பெற்று சகல காரியங்களும் இடையூறின்றி இனிதே நிறைவேற பிரார்த்தனை செய்கின்றனர்.

சிதம்பரத்தில் மார்கழி மாதத்தில் நடைபெறும் ஆருத்ரா தரிசனமும், ஸ்ரீரங்கத்தில் நடைபெறும் வைகுண்ட ஏகாதசியும் மிக முக்கியமான விசேஷங்களுள் ஒன்று.

ஆன்மிக மலர்ச்சிக்கு சிறந்த மாதமாக கருதப்படும் இந்த மார்கழி மாதத்தில் இறைவனை மனதால் துதித்து போற்றி எல்லா செல்வங்களையும் பெறுவோம்.



தோஷங்களை போக்கும் மார்கழி மாதம்..!

தமிழ் மாதங்களில் மார்கழி என்பது இறைவனுக்கு உரிய மாதமாக விளங்குகிறது. மற்ற மாதங்களில் ஒரு நாள் அல்லது ஒரு வாரம் மட்டுமே இறைவனுக்கு உகந்ததாக இருக்கும். ஆனால் மார்கழியில் மட்டும்தான் மாதம் முழுவதும் இறைவனுக்கு உகந்ததாகவே போற்றப்படுகிறது.

மார்கழி மாதத்தை தேவர் மாதம் என்று குறிப்பிடுவர். ஏனென்றால் இந்த மாதம் கடவுளை வழிபடும் மாதமாகும். இறைவனை வழிபடுவதற்காக இம்மாதம் ஒதுக்கப்பட்டுள்ளதால் இம்மாதத்தில் எந்தவித மங்கள நிகழ்ச்சிகளும் நடத்தப்படுவதில்லை.

ஆலயங்களில் சூரிய உதயத்திற்கு முன்னதாகவே பூஜை, ஆராதனை நடத்தப்படும். மேளதாள வாத்தியங்கள் முழங்கப்படும். சிவாலயங்களில் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சியும், விஷ்ணு ஆலயங்களில் மார்கழி மாதம் முழுவதும் திருப்பாவையும் பாடப்படும். மார்கழி மாதம் ஆண்டாளுக்கு முக்கியத்துவம் தரப்படும் மாதமாக போற்றப்படுகிறது.

தோஷங்களை தீர்க்கும் மார்கழி மாதம் :

மார்கழி மாதத்தில் விரதமிருந்து விஷ்ணுவை வழிபட்டால் தோஷங்கள் நீங்கி செல்வ செழிப்பை பெறலாம். இந்த மாதத்தில் இருக்கும் விரதங்களின் பலன்கள் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்கும்.

மார்கழி மாதத்தில் விரதம் இருப்பவர்களுக்கு திருமணத்தடை நீங்கும், குழந்தை பாக்கியம் கிடைக்கும், தொழிலில் நஷ்டம் நீங்கி லாபம் பெருகும். இதனால்தான் மார்கழி மாத நோன்பு மிகவும் சிறந்தது என்று முன்னோர்கள் வரையறுத்துள்ளனர்.

இந்த மாதத்தில் விரதம் இருக்க முடியாத சூழ்நிலையில் இருப்பவர்கள் அதிகாலை 4.30 மணிக்கே எழுந்து, வீட்டை சுத்தம் செய்து, நீராடி, வாசலில் கோலமிட்டு, திருப்பாவை, திருவெம்பாவை பாடல்களைப் பாடினாலே பலன் கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது.

நோய் தீர்க்கும் மாதம் :

மார்கழி மாத காற்று சருமத்திற்கும், வெள்ளை, சிவப்பு உயிர் அணுக்களுக்கும், புற்று நோய்களுக்கும், உடல் நலத்திற்கும் மிகவும் நல்லது. இதை விஞ்ஞான பூர்வமாக அறிவியல் ஆராய்ச்சியும் உண்மை என்று ஆராய்ந்துள்ளது.

எனவே மார்கழி மாதத்தின் சிறப்பிற்கேற்ப நாமும் அதிகாலையில் எழுந்து பூஜை, அபிஷேகம் போன்றவற்றை செய்து தேவர்களைப் போன்று சிறப்படைவோம்

மார்கழி மாதத்தில் செய்ய வேண்டிய வழிபாடுகள்!..

மார்கழி மாதம் கடவுளை வழிபடும் மாதமாகும். இறைவனை வழிபடுவதற்காக இம்மாதம் ஒதுக்கபட்டுள்ளதால் இம்மாதத்தில் எவ்வித மங்கள நிகழ்ச்சிகளும் நடத்தப்படுவதில்லை.

மார்கழி மாதம் விரதம் இருந்து விஷ்ணுவை வழிபட்டால் தோஷங்கள் நீங்கி செல்வ செழிப்பை பெறுவர்.

திருமணத்தடை நீங்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். தொழிலில் நஷ்டம் நீங்கி லாபம் பெருகும்.

மார்கழி மாத நோன்பு, மிகவும் சிறந்தது. மார்கழி அதிகாலை எழுந்து விடவேண்டும். வீட்டை சுத்தம் செய்து, நீராடி, கோலமிட்டு, திருப்பாவை, திருவெம்பாவை பாடல்களைப் பாட வேண்டும்.


மார்கழி மாதங்களில் வீட்டின் முன்பு கோலமிட்டால் மகாலட்சுமி வீடு தேடி வருவாள் என்பது நம்பிக்கை. இதனால் பெரும்பாலானோர் மார்கழியில் கோலமிடுகின்றனர்.

மார்கழி மாத வளர்பிறை ஏகாதசி



GET IT ON Google Play

NITHRA Life
MONEY HEALTH



First see your Health

Next see your Wealth

Both need in your Life

Learn in Nithra Life...

Click here to install the app

வைகுண்ட ஏகாதசி என சிறப்புப் பெறுகின்றது. இந்த நாளில் விரதம் ஆரம்பித்து தொடர்ந்து வரும் விரத நாட்களிலும் (ஒவ்வொரு ஏகாதசியிலும்) விரதம் இருந்தால் நமக்கு கிடைக்கும் பலன்கள் அளவிட முடியாது.

வைகுண்ட ஏகாதசியன்று விஷ்ணுவை நினைத்து விரதமிருக்க வேண்டும். துளசி தீர்த்தம் தவிர வேறு எதையும் உண்ணவும், பருகவும் கூடாது.

இரவு முழுவதும் சோர்வில்லாமல் கண் விழித்து, பரந்தாமனைப் போற்றும் பக்திப் பாடல்களைப் பாடலாம். மறுநாள் துவாதசி அன்று விஷ்ணுவை வழிபட்டு விரதத்தை முடிக்க வேண்டும்.

மார்கழி மாதம் பற்றிய தவறான அபிப்ராயம்!!...

வருடத்தில் முன்னூற்றி அறுபத்தைந்து நாட்கள் இருக்கின்றன. அவை அனைத்தையும் சுபநாட்கள் என்று சொல்ல முடியாது. எந்த நாளில் சுபக்கிரகங்கள் நல்ல நிலையில் இருக்கிறதோ அந்த நாளை சுப நாள் என்று சொல்கிறோம்.

சுப நாள் என்று வருகின்ற போது அது மனிதர்களின் தனிப்பட்ட வாழ்வில் நடத்துவதற்குரிய நிகழ்வுகளுக்காகவும் சமுதாயத்தில் அனைவரும் கூடி விழாவாக கொண்டாடுவதற்காகவும் சில சுபநாட்கள் இருக்கின்றது.

மனிதர்களுக்கு என்று தனியாக இருப்பது போல தெய்வங்களை நினைத்து நன்றி கடன் செலுத்தவும், பிரார்த்தனைகள் வைக்கவும் என்றே சில நாட்கள் இருக்கின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த மாதம் தான் மார்கழி மாதம்.

மார்கழி மாதம் பீடை மாதம் என்பதெல்லாம் கிடையாது. அது தனுர் மாதம். பீடை என்று சொல்லக்கூடாது. ஏனென்றால் ஆரோக்கியத்திற்கு உரிய மாதம் மார்கழி மாதம்.

தட்சணாயணம் மார்கழி மாதத்துடன் முடிகிறது. அதாவது சூரியனுடைய தென் பகுதி இயக்கம் இந்த மாதத்துடன் முடிகிறது. இந்த மாதத்தில் அதிகாலையில் எழுந்து இறைவனை வணங்குவதால், நாடி நரம்புகள் வலுவடைகிறது. நீண்ட ஆயுள் கிடைக்கிறது. அதனால்தான் இந்த மாதத்தை இப்படி ஒதுக்கி வைத்தார்கள்.

இந்த நேரத்தில் சூரியனுடைய கதிர்வீச்சு சில பிரச்சனைகளைத் தரக்கூடியது. அதனால் தியானம், யோகா, தெய்வீகம், ஆன்மீகம் என்று இருந்தால் சாதகமான வைப்ரேஷனைக் கொடுக்கும் என்று சொல்லியிருக்கிறார்களே தவிர கெடுதலான மாதம் கிடையாது. மாதங்களிலே மிகவும் மகத்துவம் மிக்கது மார்கழி மாதம் தான். பீடை மாதம் என்பதன் அர்த்தத்தை பலர் தவறாக புரிந்துகொண்டுள்ளனர். பீடுடைய மாதம் என்பதே நாளடைவில் மருவி பீடை மாதம் என்றாகிவிட்டது.

பீடுடைய என்றால் செல்வம் பொருந்திய, சிறப்புக்கள் நிரம்பிய என்று அர்த்தம். மாதங்களில் நான் மார்கழி என்று கீதையில் கிருஷ்ண பரமாத்மாவே கூறியிருக்கிறார் என்றால் அதன் சிறப்பை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

நமக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாள். மார்கழி மாதம் என்பது தேவர்களது ஒரு நாளின் விடியற்காலை பொழுதாகும். விடியற்காலை என்றாலே மங்களகரமானது தானே? எனவே இந்த பெருமை பொருந்திய மாதம் முழுவதும் இறை வழிபாட்டுக்கு என்றே பெரியோர்கள் ஒதுக்கிவைத்துள்ளனர். இம்மாதங்களில், சுபநிகழ்ச்சி நடத்தினால், வழிபாடு பாதிக்கும் என்பதாலேயே, இம்மாதங்களில் அவற்றை நடத்தாமல் தவிர்த்தனர். மார்கழி மாதத்தை, மார்கசீர்ஷம் என்று வட மொழியில் சொல்வர்.

மார்கம் என்றால் வழி, சீர்ஷம் என்றால், உயர்ந்த, வழிகளுக்குள் தலைசிறந்தது என்பது பொருள். இறைவனை அடையும் வழிக்கு இது உயர்ந்த மாதமாக உள்ளது.



ஆண்டாள் ஓர் அறிமுகம் !!

ஆண்டாளைப் பற்றி யோசிக்கும்போது அவரை ஒரு அறியாப் பெண்ணாக, நாராயணனையே நினைத்து அவருக்கு வாழ்க்கைப்பட பிடிவாதம் செய்யும் பெண்ணாக மட்டும் நினைக்க இயலவில்லை. அவர் இயற்றிய திருப்பாவை பாடல்களிலுள்ள தேர்ந்த புலமையும், திறமையும் பிரமிக்க வைக்கின்றன. இப்பொழுது திருப்பாவை நாயகி ஆண்டாள் பற்றிப் பார்ப்போம்.

குரு பரம்பரைப்படி, ஸ்ரீவில்லிப்புத்தூரே நம் ஆண்டாளின் பிறப்பிடமாகும். விஷ்ணுசித்தர் என்ற ஒரு பக்தர் தினமும் கண்ணனுக்கு நந்தவனத்தில் மலர் பறித்து மாலையாய் தொடுத்து பெருமாளுக்கு சேவை செய்வார். ஒரு நாள் நந்தவனத்தில் துளசி செடி அருகே ஓர் அழகியப் பெண் குழந்தையைக் கண்டார்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் வடபத்ரசாயி பெருமாள் அளித்த பாக்கியம் என்று நினைத்து அந்த பெண் குழந்தைக்கு கோதை என்று பெயரிட்டார். கோதை என்றால் தமிழில் மாலை. வடமொழியில் வாக்கைக் கொடுப்பவள் என்று பொருள். அந்த குழந்தைக்கு எல்லா கலைகளும், தமிழ் வேதாந்தம், நல்லொழுக்கம் என்று முறையாக கற்றுக் கொடுத்து வளர்த்து வந்தார்.

சிறு வயதிலிருந்து கண்ணனின் கதைகளையும், அவர் யசோதை தாயிடம் கொண்ட அன்பும், கோபியர்களிடம் செய்த குறும்புதனம்..! என்று கண்ணனை பற்றி கேட்கக் கேட்க அவரின் மீது அளவில்லா காதல் கொண்டு அவரையே மணக்க வேண்டும் என்று அவரின்பால் கொண்ட அன்பினால் அவரை நினைத்து நினைத்து அவருடன் ஓடி விளையாடி பேசி மகிழ்வது போல் நினைத்து கற்பனை உலகில் மிதந்தாள்.

இவ்வாறு, தினமும் கண்ணனுக்கு தொடுத்த மாலையை தானே அணிந்து கொண்டு அதை பார்த்து ரசித்து அதன் பிறகு கண்ணனுக்கு அணிவிப்பார். ஒரு நாள் கோதையின் அப்பா மாலையை கோவிலுக்கு எடுத்துச் செல்லும் போது அதில் கோதையின் நீள முடி இருந்ததைப் பார்த்துவிட்டார். அதனால் கோதையை கடிந்து கொண்டு வேறொரு மாலையை தொடுத்து அணிவித்தார். அந்த மாலையை ஏற்க மறுத்த பெருமாள், அன்று இரவு பெரியாழ்வார் கனவில் வந்து “கோதை சூடிய மலையே எனக்கு பிரியமானது” என்று கூறி மறைந்தார்.





உங்களுடைய
தொழில் மற்றும் பொருளை

நித்ரா காலண்டரில்

விளம்பரம் செய்ய

இங்கே கிளிக் செய்யுங்கள்

கோதையும் கண்ணணின் மீது கொண்ட காதலினால் அவரையே மணப்பதாக கூறினார். கண்ணனை அடைய பாவை நோன்பு எனும் விரதத்தை மார்கழி மாதத்தில் ஆண்டாள் மேற்கொண்டாள். இதனால் தான் திருப்பாவை தோன்றியது. திருப்பாவையில் ஆண்டாள், ஸ்ரீவில்லிப்புத்தூரை ஆயர்பாடியாகவும், தன் தோழியரை கோபியராகவும் உருவகித்து பாடியுள்ளார்.

ஒரு நாள், பெரியாழ்வார் கனவில் வந்து ஆண்டாளை மணப்பதாகவும் ஸ்ரீரங்கத்துக்கு மணப்பெண்ணாக அழைத்து வருமாறு கூறினார். அங்கு கருவறைக்குள் ஆண்டாள் சென்றதும் மறைந்து இறைவனடி சேர்ந்துவிட்டார்.

திருப்பாவை பிறந்த கதை!..

மார்கழி மாதத்தை தேவருலகின் பிரம்ம முகூர்த்த காலம் என்பார்கள். அதாவது, தேவருலகில் அதிகாலை நேரத் தொடக்கம் என்பதாகும். எனவேதான், இப்பூவுலகில் ஆன்மிக மாதமான மார்கழியில், அதிகாலை நேரத்தில் எழுந்து, குளிர்ந்த நீரில் குளித்து ஆலயங்களுக்குச் சென்று வணங்கி, தமிழ் தோத்திரப் பாடல்களான திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி உள்ளிட்ட தமிழ் வேதங்களைப் பாடி, இறைவனைத் தொழுவது காலம் காலமாக இருந்து வரும் பண்பாடு ஆகும்.

ஸ்ரீவில்லிப்புத்தூரில் பிறந்தவள் ஆண்டாள். மனிதர்கள் யாரையும் மணக்கமாட்டேன், பெருமாளை தான் மணப்பேன் என சபதம் கொண்டாள். கிருஷ்ணாவதார காலத்தில், ஆயர்பாடி கோபியர்கள் கண்ணனை அடைய மேற்கொண்ட பாவை நோன்பை மேற்கொண்டாள், ஆண்டாள்.

ஸ்ரீவில்லிப்புத்தூரில் இருந்த பெருமாளின் சன்னதிக்கு சென்று, அவருடைய முகத்தைப் பார்க்க வெட்கப்பட்டு, கையில் இருந்த பாஞ்சஜன்யம் என்னும் சங்கைப் பார்த்து மார்கழி திங்கள் மதிநிறைந்த நன்னாளால் எனத் துவங்கி வங்கக்கடல் கடைந்த மாதவனை கேசவனை என முடியும் முப்பது பாடல்கள் பாடினாள்.

திரு என்றால் மரியாதைக்குரிய எனப் பொருள். பாவை என்றால் பெண். நமது வணக்கத்துக்குரிய பெண் தெய்வமாகிய ஆண்டாள் பெருமாளை பற்றி பாடியதால் இது திருப்பாவை ஆயிற்று.

முதல் பாடல் திருப்பாவையின் நோக்கத்தை சுருக்கமாக எடுத்துச் சொல்கிறது. இரண்டு முதல் ஐந்து பாடல்கள் பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமனின் சிறப்புகளையும், ஆறு முதல் 15 பாடல்கள் ஆழ்வார்களுக்கு ஒப்பான அடியார்களை தோழிகளாக கற்பனை செய்து அவர்களை எழுப்பிக்கொண்டு கோவிலுக்கு செல்வதை எடுத்துச் சொல்கிறது.

கடைசி 15 பாடல்கள் தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு பெருமாளைக் கெஞ்சும் ஆண்டாளின் மனநிலையை உணர்த்துகிறது. திருப்பாவை வைணவர்களால் பெரிதும் போற்றப்படுகிறது.

இது பாகவத வரலாற்றை ஒட்டி வருவது. கண்ணனை நாயகனாகப் பெறவேண்டும் என்ற வேட்கையும், நாடு செழிக்க மழை வேண்டும் என்ற விழைவும், ஆக்கள் விருத்தியடைய வேண்டும் என்ற விருப்பமும் தன்னகத்தே கொண்டது இந்நூல்.

மார்கழி மாத முக்கிய விரதங்கள் ..!

மார்கழி மாதத்தில் வழிபாடு என்பது வழி வழியாகத் தொடர்ந்து கடைபிடிக்கப்படுகிறது. அந்த வகையில் மார்கழி மாத நோன்பு என்பது மிகவும் சிறப்பு வாய்ந்தது. மார்கழி மாதத்தில் விரதம் இருந்து விஷ்ணுவை வழிபட்டால் தோஷங்கள் நீங்கி செல்வ செழிப்புடன் வாழலாம். மேலும் திருமணத்தடை நீங்கும், குழந்தை பாக்கியம் கிடைக்கும், தொழிலில் நஷ்டம் நீங்கி லாபம் பெருகும்.

மார்கழி மாதத்தின் ஒவ்வொரு நாளும் நித்ய விரத நாளாகக் கொண்டாடப்படுகிறது. ஸ்ரீமந்நாராயணனின் கேசவா, நாராயணா, கோவிந்தா, மாதவா, மதுசூதனா, விஷ்ணு, த்ரிவிக்ரமா, வாமனா, ஸ்ரீதரா,

ரிஷிகேசா, பத்மனாபா, தாமோதரா என்ற பனிரெண்டு நாமங்களும் பனிரெண்டு மாதங்களாக கருதப்படுகின்றன. இதில் முதல் நாமமாக விளங்கும் ஸ்ரீமந்நாராயணனின் கேசவா என்பது மாதங்களுக்கு மணிமகுடமான மார்கழியாக விளங்குகிறது.

பாவை நோன்பு :

மார்கழி மாதத்தில், பெண்கள் இருக்கும் விரதங்களில் முக்கியமானது மார்கழி நோன்பாகும். இது பாவை நோன்பு என்றும் அழைக்கப்பெறுகின்றது. பாவை நோன்புக் காலத்தில் ஆண்டாள் இயற்றிய திருப்பாவை, நாச்சியார் திருமொழி மற்றும் ஆழ்வார்கள் பாசுரங்களை பாடி மகிழ்ந்து விரதத்தை கடைபிடிப்பார்கள்.

திருவெம்பாவை நோன்பு :

திருவெம்பாவை நோன்பு என்பது மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்துக்கு ஒன்பது நாட்களுக்கு முன்பு தொடங்கி கடைபிடிக்கப்படும் நோன்பாகும். பாவை நோன்பு, கார்த்யாயனி விரதம் என்று அழைக்கப்படும் சிவ விரதமாகவும், வைணவ விரதமாகவும் போற்றப்படுகிறது.

வைகுண்ட ஏகாதசி விரதம் :

மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதசி விரதத்தை கடைபிடித்தால் மகாவிஷ்ணு மகிழ்வுடன் சொர்க்கத்தில் இடம் தருவார் என்பது ஐதீகம். இவ்விரதம் இருப்பதால் சகல பாக்கியங்களும் கிடைக்கும். கல்வி, பதவி, புத்திர பாக்கியம் கிட்டும். நம் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். பாவம் விலகும். மறுமையில் சொர்க்கம் கிட்டும்.

ஆண்கள், பெண்கள் என இருபாலரும் இந்த விரதத்தை கடைபிடிக்கலாம். வைகுண்ட ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்தால் மூன்று கோடி ஏகாதசி விரதங்களைக் கடைபிடித்த பலன் கிடைக்கும். அதனால் முக்கோடி ஏகாதசி என்றும், மோட்ச ஏகாதசி என்றும், பீம ஏகாதசி என்றும் இதற்குப் பெயருண்டு. பாற்கடல் நஞ்சினை ஈசன் விழுங்கியதால் நஞ்சுண்ட

ஏகாதசி என்றும் கூறுவர்.

திருவாதிரை நோன்பு :

திருவாதிரை நோன்பு (விரதம்) என்பது திருவாதிரை நட்சத்திரத்தோடு கூடிய நன்னாளில் இருக்கும் ஒரு நோன்பாகும். இவ்விரதம் சிவனுக்கு மிகவும் உகந்தது.

மார்கழி மாத திருவாதிரையை இறுதி நாளாகக் கொண்டு, பத்துத் திங்கள்திருவெம்பாவை நோன்பு நோற்கப்படுகின்றது. விரதத்தைக் கடைபிடிப்போர் திருவாதிரை தினத்தில் உபவாசம் இருந்து மறுநாள் பாரயணம் செய்வர். இந்நாளில் பெண்கள் மாங்கல்ய பலனுக்காக நோன்பு இருப்பார்கள். திருவாதிரை நட்சத்திரம் அன்று புது மாங்கல்யச் சரடு மாற்றிக் கொள்வார்கள்.

ஆண்டாள் விரதம்..!

ஆண்டாள் பூரம் நட்சத்திரத்தில் அவதரித்தவர். அதனால், ஒவ்வொரு மாதமும் பூரம் நட்சத்திர தினத்தன்று ஆண்டாளை நினைத்து விரதம் இருந்தால் நல்லது நடக்கும். திருமணமாகாத பெண்கள் திருப்பாவையில் தினமும் ஒரு பாடலை பாடி வந்தால் விரைவில் திருமணம் நடைபெறும். மேலும், பூரம் நட்சத்திர தினத்தன்று ஆண்டாளுக்கு மாலை சார்த்தி வழிபட்டாலும், வாரணம் ஆயிரம் பாடி வந்தாலும் பெண்களுக்கு அவர்கள் விரும்பிய கணவர் கிடைப்பார்.

பூரம் விரதம் போலவே திருவோணம் விரதமும் மகிமை வாய்ந்தது. மார்கழி மாதம் முழுவதும் ஆண்டாளை வேண்டி விரதமிருந்து வழிபாடு செய்து வந்தால் திருமணமாகாத கன்னியருக்கு விரைவில் திருமணம் நடைபெறும்.

திருமாலை தனது கணவனாக மனதில் எண்ணிக்கொண்டு, அவரையே நினைத்து உருகியவர் ஆண்டாள். ஸ்ரீவில்லிபுத்தூர் பெருமாள் கோவிலில் குடிகொண்டிருக்கும் பெருமாளுக்காக தொடுத்த மலர் மாலைகளை எல்லாம், தானும் அணிந்து அழகு பார்த்து, சூடிக்கொடுத்த சுடர்கொடியாக

ஸ்ரீ தியா

ஆன்மிக அங்காடி



அனைத்து விதமான

ஆன்மிக மற்றும் பூஜை பொருட்கள்

வாங்க சிறந்த இடம்

மேலும் விவரங்களுக்கு

95972 15816







Exclusive Online Store for Pooja Products

www.sridiya.com

Sri Diya Stores : Online Pooja Stores

GET IT ON Google Play

மாறியவர் ஆண்டாள்.

உலகத்தை ஆளும் கண்ணனே தனக்கு கணவனாக வரவேண்டும் என்பதற்காக, ஆண்டாள் மேற்கொண்ட நோன்பு தான் பாவைநோன்பு. இந்த நோன்பை கடைபிடிப்பதற்காக அதிகாலையில் எழுந்து, தனது தோழியரையும் தன்னுடன் அழைத்துச் சென்று நீராடிவிட்டு வருவார். பின்பு தன்னை கோபிகையாகவும், ஸ்ரீவில்லிபுத்தூரை ஆயர்பாடியாகவும், பெருமாள் அமர்ந்த கோவிலை கண்ணனின் வீடாகவும் எண்ணிக்கொண்டு தினமும் கோவிலுக்கு சென்று வழிபாடு செய்தார்.

திருமாலை தவிர, மற்ற மானிடரை கணவனாக ஏற்க மாட்டேன் என்று சபதம் மேற்கொண்ட ஆண்டாள், கிருஷ்ணன் அவதாரத்தின் போது கிருஷ்ணரை மணக்க கோபியர்கள் மேற்கொண்ட பாவை நோன்பை, மார்கழி மாதத்தில் ஆண்டாளும் மேற்கொண்டார்.

ஸ்ரீவில்லிபுத்தூர் பெருமாள் கோவிலுக்கு சென்று அங்கு, அவரது கையில் இருந்த சங்கை பார்த்தபடி, மார்கழி திங்கள் மதி நிறைந்த நன்னாளால்- என தொடங்கி, வங்க கடல் கடைந்த மாதவனை கேசவனை என்று முடியும் முப்பது பாடல்களை திருமாலை நினைத்து பாமாலையாக பாடினார்.

ஆண்டாள் விரதம் இருந்து மனதிற்கு பிடித்த திருமாலை திருமணம் செய்தது போல, தனக்கும் விரும்பிய கணவர் அமைய வேண்டி விரதம் இருக்கும் பெண்கள், தங்கள் விரத நாட்களில் நெய், பால் சேர்த்த உணவு வகைகளை உண்ணக்கூடாது.

மற்ற எளிய வகை உணவுகளைச் சாப்பிட்டு விரதத்தை கடைபிடிக்கலாம். ஆண்டாள், பெருமாள் படம் வைத்து உதிரிப்பூ தூவி காலையும், மாலையும் வழிபாடு செய்யலாம். இவ்வாறு செய்வதால் ஆண்டாள் மனம் மகிழ்ந்து, சிறந்த கணவனைத் தர அருள்புரிவாள். திருமணத்தடைகளும் நீங்கும்.

மனநிம்மதி கிடைக்க ஆண்டாளை வணங்குங்கள்..!



திருமாலை அன்றி ஒருவரையும் கணவராக ஏற்க மறுத்தவர் ஆண்டாள். அதற்காக பாவை நோன்பை மேற்கொண்டு, தன் விருப்பப்படியே திருமாலை மணம் புரிந்தவர். பாவை(பெண்) ஒருவர் பாடியதாலும், பெண்கள் இருக்கும் நோன்பைப் பற்றிய பாடல் என்பதாலும், ஆண்டாள் பாடிய பாடல் திருப்பாவை என்று பெயர் பெற்றது.

திருப்பாவை மொத்தம் 30 பாடல்களைக் கொண்டது. திருப்பாவையின் முதல் பாடலானது, திருப்பாவையின் தொகுப்பு பாடப்பட்டதற்கான நோக்கத்தை எடுத்துரைக்கும் வகையில் சுருக்கமாக அமைந்துள்ளது. அதைத் தொடர்ந்து வரும் 2 முதல் 5 வரையுள்ள பாடல்கள், திருப்பாற்கடலில் பள்ளிகொண்டுள்ள நாராயணரின் சிறப்பை எடுத்துக் கூறுகிறது.

ஆறு முதல் பதினைந்து வரையுள்ள துதிப்பாடல்கள், ஆழ்வார்களுக்கு ஒப்பாக, பெண் தோழியர்களை கற்பனை செய்து கொண்டு அவர்களை எழுப்பி, நீராடிவிட்டு கோவிலுக்கு செல்வதை சொல்கிறது. அடுத்து வரும் பதினைந்து பாடல்களும், உன்னையே கணவனாக எண்ணிக் கொண்டுள்ள என்னை ஏற்றுக்கொள் என்று வெண்ணெய் உண்டவனை நினைத்து உருகிப்பாடுவதாக அமைந்திருக்கிறது.

மனநிம்மதி தரும் ஆண்டாள் :

இத்தனை பெருமைமிக்க ஆண்டாளாகிய மகாலட்சுமியிடம் நாம் செல்வ செழிப்புடன் வாழ வேண்டும் என்று வேண்டிக்கொள்வோம்.

ஆனால் செல்வம் இருந்தால் மனநிம்மதி கிடைத்துவிடுமா? அந்த நிம்மதியைத் தருபவர் தான் ஆண்டாள்.

ஆண்டாள் பூமாதேவியின் அவதாரம் என்பதால் பொறுமை குணம் வாய்ந்தவர். நாம் அறிந்தும் அறியாமலும் செய்கின்ற தவறுகளை உணர்ந்து ஆண்டாளிடம் மன்னிப்பு கேட்டால் பகவானிடம் கூறாமல் மறைத்து விடுவார்.

அதேநேரம், ஏதேனும் ஒரு நல்லது செய்தால், அதை பெருமாளிடம் பெரிதாகக் கூறி, வேண்டிய வரத்தை வாங்கித்தந்து அருள் புரிவார். ஆண்டாளை பரமகாருண்ய தேவதை என்று கூறுவர்.

மனிதனாகப் பூமியில் பிறந்த நாம், ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வந்து, தான் செய்த பாவங்களையெல்லாம், ஒரு முறையாவது ஆண்டாளிடம் சொல்லி மன்னிப்பு கேட்க வேண்டும். நாம் மனதார மன்னிப்பு கேட்பதால், அவர் மனம் இறங்கி அவற்றையெல்லாம் மறைத்து, மனம் திருந்திவிட்டதை மட்டும் பகவானிடம் எடுத்துச்சொல்லி மன்னிப்பைப் பெற்றுத் தருவார். நாமும் குற்றமற்ற மனதுடன் மனநிம்மதி பெற்று வாழலாம்.



திருப்பாவை சிறப்பு..!

உலகில் மட்டுமின்றி இலக்கிய வகையிலும் திருப்பாவை தனக்கென ஒரு தனி தகுதியை பெற்றுள்ளது. திருப்பாவை பனிரெண்டு ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் பாடிய நூல் ஆகும். இது 30 பாடல்களால் ஆனது. வைணவப் பக்தி நூல்களின் தொகுப்பான நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் 473-503 வரையுள்ள பாடல்கள் திருப்பாவைப் பாடல்கள் ஆகும்.

ஒவ்வொரு பாசுரத்தைக் கொண்டே எல்லாப் பொருள்களையும்

அறியலாம் என்பர். ஒரு பெரிய காட்சியினை மற்றும் தோற்றத்தினை ஒரு சிறிய கண்ணாடி காட்டிவிடுவதைப் போல திருப்பாவையில் முதற்பாட்டே பல உண்மைகளை உணர்த்துகின்றது.

மேலும், இந்த பாட்டில் சிறந்த சொற்கள் சிறந்த இடங்களில் சிறந்த வகையில் அடுக்கப்பெற்றுள்ளதால் செல்வப்பாட்டு என்றும் இப்பாடலை கூறுகின்றனர்.

திருப்பாவையில் உள்ள சொற்கள் வெளிப்படையாகத் தோன்றும் பொருள் ஒன்றிருக்க, உள்ளுற ஆழ்ந்து பார்க்கும் போது கிடைக்கும் உள்ளுறைப்பொருள் வேறொன்றும் இருப்பதாக சான்றோர்கள் கருதுகின்றனர்.

ஆண்டாள் அருளிய பாசுரங்களை திருப்பாவை என்று அழைக்கின்றோம். ஆனால், ஆண்டாள் அதற்கு சூட்டிய பெயர் சங்கத் தமிழ் மாலை முப்பது என்பதாகும்.

ஆண்டாளைப் பற்றியும், அவர் பாடிய திருப்பாவையின் சிறப்பு பற்றியும், அவரை வாழ்த்திய வாழ்த்துரையும் ஆன்றோர்களால் இயற்றப்பட்டு இன்றும் பாடப்பட்டு வருகின்றன.

மாதவனாகிய எம்பெருமானுக்கு உகந்த மார்கழி மாதத்தில் காலை நேரத்தில் அனைத்து பெருமாள் கோவில்களிலும் இசைக்கப்படுவதே

நமது

நித்ரா காலண்டரில்

மிக குறைந்த கட்டணத்தில்

புதிய ஜாதகம் கணித்து

பயன்பெறுங்கள்

+

100க்கு மேற்பட்ட

PDF இலவசமாக

தரவிறக்கம்

செய்துகொள்ளலாம்..



ஜாதகம் கணிக்க

இங்கே கிளிக் செய்யுங்கள்

திருப்பாவையின் பெரும் சிறப்பாகும்.

எங்கெல்லாம் பெருமானின் திருக்கோவில்கள் உள்ளதோ அங்கெல்லாம், ஆண்டாள் தனக்கும் ஒரு தனிச் சந்நதி கொண்டுள்ளார்.

ஒரே அடிகொண்டு உலகையே அளந்த பரந்தாமனின் புகழைப் பாடுவதனாலேயே புவியில் வாழும் மக்கள் தமது துன்பம் நீங்கி இன்புற்றிருக்க இயலும் என இப்பாடலின் மூலம் ஆண்டாள் நமக்கு கூறுகிறார்.

மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்

நீராடப் போதுவீர்! போதுமினோ நேரிழையீர்!

என்ற ஆண்டாளின் முதல் பாசுரமே பெருமாள் திருத்தலங்களில் மார்கழியில் பாடப்படும் ஒப்பற்ற பாசுரமாகும்.

திருப்பாவையின் பாசுரங்களின் அர்த்தங்கள்..!

முதல் பாசுரத்தில் வரும் மார்கழித் திங்கள் என்ற பாடல், நோன்புக்கான நேரத்தையும், நோன்புக்கான மூலப்பொருளாக விளங்கும் பெருமாளை குறித்தும் பாடப்படுவது ஆகும்.

இரண்டாவது பாசுரத்தில் வரும் வையத்து வாழ்வீர்காள் என்ற பாடல், நோன்பின்போது செய்யத்தகாதவை பற்றி பாடப்படுவது ஆகும்.

மூன்றாவது பாசுரத்தில் வரும் ஓங்கி உலகளந்த என்ற பாடல், நோன்பினால் விளையும் நன்மைகள் குறித்து பாடப்படுவது ஆகும்.

நான்காவது பாசுரத்தில் வரும் ஆழிமழைக்கண்ணா என்ற பாடல், மழைக்காக வருணனை வேண்டி பாடப்பட்டது ஆகும்.

ஐந்தாவது பாசுரத்தில் வரும் மாயனை மன்னு வடமதுரை என்ற பாடல், நோன்புக்கு ஏற்படக் கூடிய தடைகளை கண்ணனே நீக்க வல்லவன் என்று போற்றி பாடப்பட்டுள்ளது.

ஆறாவது பாசுரத்திலிருந்து 15-வது பாசுரம் வரையில், கோகுலத்தில்

வாழும் கோபியரிடம், உறக்கம் விட்டெழுந்து, கண்ணனைத் தரிசித்து வணங்கச் செல்லும் அடியவர் கூட்டத்தோடு சேருமாறு அழைப்பது பற்றி பாடப்பட்டுள்ளது.

பதினாறாவது பாசுரத்தில் வரும் நாயகனாய் நின்ற என்ற பாடல், நந்தகோபர் மாளிகையில் உள்ள துவார பாலகரை எழுப்பி, உள்ளே செல்ல அனுமதி தர வேண்டும் என்பதைப் பற்றி பாடப்பட்டுள்ளது.

பதினேழாவது பாசுரத்தில் வரும் அம்பரமே என்ற பாடல், நந்தகோபர், யசோதா பிராட்டி, கண்ணபிரான், பலராமன் என்று நால்வரையும் விழித்தெழுமாறு வரிசையாக அவர்களை அழைப்பது பற்றி பாடப்பட்டுள்ளது.

பதினெட்டாவது பாசுரத்தில் வரும் உந்து மதக்களிற்றன் என்ற பாடல், நப்பின்னை பிராட்டியை விழித்தெழ வேண்டி பாடப்பட்டுள்ளது.

பத்தொன்பது மற்றும் இருபதாவது பாசுரங்களில் நப்பின்னை, கண்ணன் என்று இருவரையும் ஒரு சேர, உறக்கம் விட்டு எழுந்து வர வேண்டும் என்பதைப் பற்றி பாடப்பட்டுள்ளது.

20-22-வது பாசுரங்களில் வரும் பாடல் கோபியர் கண்ணனின் கல்யாண குணங்களைப் போற்றியும், கண்ணனின் அருட்கடாட்சத்தை மட்டுமே நம்பி வந்திருப்பதை பற்றியும் பாடுவது ஆகும்.

23-வது பாசுரத்தில் வரும் மாரி மலை முழைஞ்சில் என்ற பாடல், கிருஷ்ண சிம்மத்தை அவருக்கான சிம்மாசனத்தில் அமர வேண்டி பாடப்பட்டுள்ளது. 24-வது பாசுரத்தில் வரும் அன்று இவ்வுலகம் அளந்தாய், என்ற பாடல் அம்மாயப்பிரானுக்கு மங்களாசாசனம் செய்வது பற்றி பாடப்படுவதாகும்.

25-வது பாசுரத்தில் வரும் ஒருத்தி மகனாய் பிறந்து என்ற பாடல், கோபியர் தங்களை ரட்சித்து அரவணைக்க அவரைத் தவிர வேறு மார்க்கமில்லை என்று உணர்த்துவதைப் பற்றி பாடப்பட்டுள்ளது.

26-வது பாசுரத்தில் வரும் மாலே மணிவண்ணா என்ற பாடல், நோன்புக்கான பொருள்களை கண்ணனிடம் யாசிப்பது பற்றி பாடப்பட்டுள்ளது.

27-வது பாசுரத்தில் வரும் கூடாரை வெல்லும் என்ற பாடல், பாவை நோன்பு முடிந்ததும், கோபியர் தாங்கள் வேண்டும் பரிசுகளைப் பட்டியலிடுவது பற்றி பாடப்படுவது ஆகும்.

28-வது பாசுரத்தில் வரும் கறவைகள் பின்சென்று என்ற பாடல், கோபியர் தங்களது தாழ்மை, கண்ணனின் மேன்மை, அவருடனான பிரிக்க முடியாத உறவு, தங்களது பாவ பலன்களை நீக்கக் கோருதல் ஆகியவை பற்றி பாடப்பட்டுள்ளது.

29-வது பாசுரத்தில் வரும் சிற்றஞ்சிறுகாலே என்ற பாடல், எந்நாளும் பிரியாதிருந்து கண்ணனுக்குத் திருச்சேவை செய்வதற்கு அருள வேண்டும் என்பதைப் பற்றி பாடப்பட்டுள்ளது.

30-வது பாசுரத்தில் வரும் வங்கக்கடல் கடைந்த என்ற பாடல் திருப்பாவை ஓதும் அடியவர் கண்ணபிரானின் அன்புக்கும், அருளுக்கும் பாத்திரமாகி, பேரானந்தம் அடைவர் என்ற செய்தியை வெளிப்படுத்த பாடப்பட்டுள்ளது.

மார்கழி அஷ்டமி விரதம்..!

மார்கழி அஷ்டமி அன்று சகல ஜீவராசிகளுக்கும் இறைவன் படியளப்பதால், இன்றைய தினம் சிவபெருமானை வழிபட்டால் வாழ்நாள் முழுவதும் உணவு கிடைக்கும். உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் சிவபெருமான் உணவை படியளக்கும் திருவிழாவே, அஷ்டமி பிரதட்சண சுவாமி புறப்பாடு ஆகும். இந்த விழா மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ரிஷப வாகன சட்டத்தேர் உலாவாக கொண்டாடப்படுகிறது. இந்த படியளக்கும் திருநாளைப் பற்றிய ஒரு சுவாரஸ்யமான கதை உண்டு. அதை பற்றி இங்கு பார்ப்போம்.

NITHRA®
Empowers Everyone

Reached NEW MILESTONE

நித்ரா®
2025
காலண்டர்

2 கோடி தமிழர்களின்

ஆதரவையும் நம்பிக்கையையும் பெற்ற

தமிழகத்தின் நம்பர்.1

நித்ரா காலண்டர்

நாட்காட்டி முதல் பஞ்சாங்கம் வரை அனைத்து தகவல்களும்.. விரல் நுனியில்..

ஒரு சமயம், பார்வதிதேவிக்கு மனதில் ஒரு சந்தேகம் எழுந்தது. அது என்னவென்றால், அனைத்து உயிர்களுக்கும் சிவபெருமான் உணவு அளிக்கிறாரா? இல்லையா? என்று மனதுக்குள் கேள்வியை எழுப்பியவாறு இருந்தார்.

கடைசியாக அதை சோதனை செய்து பார்த்து உண்மையை அறிந்து கொள்ளலாம் என்று முடிவு செய்தார். அதற்காக, பார்வதிதேவி ஒரு எறும்பை எடுத்து குவளைக்குள் போட்டு அடைத்து வைத்து விட்டார்.

சிவபெருமான் அன்றைய தினம் படியளக்கச் சென்றுவிட்டு திரும்பி வந்தார். அவரை பார்வதிதேவி வழி மறித்து, அனைத்து ஜீவராசிகளுக்கும் படியளப்பதாக கூறுகிறீர்களே.! இன்று அனைத்து உயிர்களுக்கும் படியளந்து முடித்துவிட்டீர்களா? என்று எதுவும் அறியாததுபோல கேட்டார்.

ஆமாம்! அதில் உமக்கென்ன சந்தேகம்..? என்று சிவபெருமான் பதிலளித்தார். இன்று சிவன் நம்மிடம் வசமாக சிக்கிக் கொண்டார்! என்று மனதிற்குள் நினைத்துக் கொண்ட பார்வதிதேவி, எறும்பை அடைத்து வைத்திருந்த குடுவையை எடுத்து வந்தாள். அந்தக் குடுவையை திறந்து பார்த்தபோது, அதற்குள் இருந்த எறும்பு, ஒரு அரிசியை சாப்பிட்டுக் கொண்டிருந்தது. பார்வதிதேவிக்கு அதிர்ச்சியாக இருந்தது. பின் தான் செய்த தவறை நினைத்து வருந்தி, சிவபெருமானிடம் பார்வதிதேவி மன்னிப்பு கேட்டார்.

எனவே, இறைவன் எல்லா ஜீவராசிகளுக்கும் ஏதோ ஒரு வழியில் படியளந்து விடுகிறார். இந்த திருவிளையாடல் நடந்த நாள் மார்கழி மாதத்தில் வருகிற தேய்பிறை அஷ்டமி திதி ஆகும். அன்று தான் அஷ்டமி பிரதட்சணம் செய்யும் நாள். அதனால் மார்கழி மாத அஷ்டமியில் விரதமிருந்து தர்மத் திருநாளாக மனதில் நினைத்துக் கொண்டு, நம்மால் முடிந்த உதவியைப் பிறருக்குச் செய்தால் இறையருள் கிடைக்கும். படியளக்கும் திருநாளில் வழிபாட்டை மேற்கொண்டால் படிப்படியாக வாழ்வில் முன்னேற்றமும் ஏற்படும்.





பெண்களுக்கு ஸ்பெஷலான மார்கழி மாதம்...!!

நம் முன்னோர்கள் ஆடியில் அம்மனுக்கும், புரட்டாசியில் பெருமாளுக்கும், மார்கழியில் அனைத்து தெய்வங்களும் என மாதத்திற்கு ஒரு தெய்வத்தை வழிபாடு செய்து வந்துள்ளனர். ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு சிறப்பு உள்ளது போல மார்கழி மாதத்திற்கும் தனி சிறப்பு உள்ளது.

எல்லா விரதங்களிலும் பெண்களை முன்னிலைப்படுத்துவதற்கான காரணம் :

பெண்களை 6 விதமான தன்மைகள் கொண்டவள் என்று கருதுகின்றனர். பெண் என்பவள் தெய்வமாகவும், மனைவியாகவும், குருவாகவும், நண்பனாகவும், ஆசானாகவும், போதகனாகவும் (செயல்திறன்) ஒரு ஆணுக்கு அமைகின்றாள்.

அந்த பெண்ணின் ஆரோக்கியம் நன்றாக இருந்தால்தான் ஒவ்வொரு குடும்பமும் ஆரோக்கியமாக இருக்கும். ஆகவேதான் பெரும்பாலான விரதங்களில் பெண்களின் பங்கு அதிகம் உள்ளது.

எந்தவொரு மனிதரும் தவறுகள் செய்யாமல் இருப்பதில்லை. அறிந்து செய்யும் தவறுகள், அறியாமல் செய்யும் தவறுகள் என்று செய்திருக்கலாம். மேலும் நடக்கும்போது நம் காலடிபட்டு எறும்பு, பூச்சி போன்ற எத்தனை உயிர்கள் சாகின்றன? இதுவும் ஒருவகை பாவம்தான்.

இதனால் வரும் தோஷத்தினால் கன்னிப் பெண்களுக்கு திருமணத்தடை ஏற்படும். இதைத் தவிர்க்கவே பெண்கள் வாசலில் அரிசி மாவினால் கோலம் போடும் பழக்கம் ஏற்படுத்தப்பட்டது.

மழை, பனி, குளிர் காரணமாக உணவுக்கு வழியின்றி இரவு முழுவதும் உணவு இல்லாமல் இருக்கும் சிறு உயிரினங்களுக்கு அதிகாலையில் தமக்குத் தேவையான உணவைத் தேடி வரும்போது, நாம் அரிசி மாவில் கோலம் போடுவதால் அதற்கு உணவு கிடைக்கும். அந்த உணவினை சிறு உயிரினங்களுக்கு அளித்த பெண்களுக்கு தோஷங்கள் அகலும் என்பது நம்பிக்கை.

அந்த காலத்தில் ஆண்டாள் மார்கழி மாதத்தில்தான் தினமும் ஒவ்வொரு பாசுரமாகப் பாடி சென்று பெருமாளை வழிபடுவார். ஆனால் தான் மட்டும் பெருமாளைப் பார்த்து பலன் அடையக்கூடாது என்று எண்ணி தன் தெருவில் இருக்கும் கன்னிப் பெண்கள், குழந்தை இல்லாதவர்கள் என எல்லாப் பெண்களையும் தன்னுடன் அழைத்துச் சென்று வழிபட வைத்தார். தன் மனம் கவர்ந்த கண்ணனின் முன் நின்று நீயே என் கணவனாக வர வேண்டும் என்று கூறி வழிபாடு செய்தார்.

அதிகாலையில் எழுந்து ஒரு மனதுடன் தனக்குச் சிறந்த கணவன் கிடைக்க வேண்டும் என்ற ஆழ்மனது நம்பிக்கையுடன் பரிசுத்தமான காற்றை சுவாசித்து விரதம் மேற்கொள்ளும்போது அப்பெண்ணிடமிருந்த எதிர்மறை எண்ணங்கள் விலகி மன ஆரோக்கியம் மேம்பட்டு அவர்கள் நினைத்த காரியம் கைகூடும்.

பெண்கள் எவ்வாறு இருக்க வேண்டும்? என்பதற்கு உதாரணமாக திகழ்ந்த ஆண்டாள், பெருமாளின் மீது கொண்ட அதீத பக்தியின் காரணமாக, அவரையே தன் கணவனாக அடைய விரும்பினாள். கண்ணனை மணக்க வேண்டி மார்கழி மாதத்தில் பாவை நோன்பு இருந்த ஆண்டாளுக்கு அருள்புரிந்த பெருமாள், பங்குனி உத்திரத்தில் ஆண்டாளை மணந்து கொண்டார். எனவே பெண்கள் பாவை நோன்பு இருந்தால் விரும்பிய கணவன் கிடைப்பார் என்பது நம்பிக்கை. இதுபோன்ற

காரணங்களால்தான் மார்கழி மாதம் பெண்களுக்கு உகந்த மாதமாக கருதப்படுகின்றது.





மார்கழி மாதத்தில் கோலம் போடுவதன் சிறப்புகள் !!

மார்கழி மாதம் கோலத்திற்கு உகந்த மாதம். எல்லா நாளும் கோலம் போடுவோம். ஆனால், மார்கழி என்றால் தனிச் சிறப்பு. இறைவனை தொழுவதற்காக சிறந்த மாதமாக இதை கூறுகிறார்கள். வாழ்நாளை வீணாக்காமல் எங்கும் நிறைந்த இறைவனை வாயினால் பாடி மனதினால் சிந்தித்தால் நாம் முன்பு செய்த பிழைகளும், இனி மேல் வருவதும் நெருப்பில் இட்ட தூசு போல அழிந்து விடும்.

அதிகாலை பிரம்ம முகூர்த்த நேரத்தில் எழுந்து கை, கால்களை அசைத்து இடுப்பை வளைத்து வாசல் தெளித்து கோலம் போடும்போது குளிர் போய், வெப்பம்(கதிரவன்) கிடைக்கிறது.

அதிகாலை நேரத்தில் நிலவும் இருப்பதால் அதன் குளிர்ச்சியும் கிடைக்கிறது. வான்வெளியில் பிரம்ம முகூர்த்த நேரத்தில் தேவர்கள், ரிஷிகளிடமிருந்து ஆற்றல்களும் ஆசிகளும் கிடைக்கும்.

YouTube

NITHRA AURA













ஆன்மிகம் சார்ந்த வீடியோவை காண

நித்ரா ஆரா சேனலுடன்

இணைந்திருங்கள்

நித்ரா ஆரா சேனலுக்கு செல்ல இங்கே கிளிக் செய்யுங்கள்

நல்ல காற்று ஓசோன் வாயு கிடைக்கிறது. ஒளி வடிவமான இறைவனை வணங்கும் போது ஒளி ஆற்றல் கிடைக்கிறது. கோவிலை வலம் வரும் போது நிலத்தின் ஆற்றல் கிடைக்கிறது.

அக்காலத்தில் அரிசி மாவால் தான் வீட்டின் முற்றத்தில் பலவகை கோலம் போடுவார்கள். கோலங்கள் தீயசக்திகளை வீட்டினுள் வருவதை தடுக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

பித்துருக்கள் வீட்டினுள் வருவதற்கு ஏதுவாகவும், அவர்களிடம் ஆசிபெற ஏதுவாகவும் அமாவாசை சிரார்த்த தினங்களில் வீட்டில் கோலம் இடாத வழக்கமும் உண்டு.

ஊருக்கு முன் வாசல் தெளித்து கோலம் போடு, இருள் பிரியும் முன் கோலம் போடு, சூரியன் வருவதற்கு முன் கோலம் போடு என்று வீட்டுப் பெரியவர்கள் சொல்லிக் கொண்டே இருப்பார்கள்.

யாராவது வீட்டை விட்டு அதிகாலையில் வெளியில் போவதாய் இருந்தால் அவர்கள் போவதற்கு முன் வாசல் தெளித்துக் கோலம் போடு, அவர்கள் போனபின் தெளிக்காதே என்றெல்லாம் பெரியவர்கள் கூறுவார்கள். கோலங்கள் வெளியில் செல்வோருக்கும் பாதுகாப்பு தரும்.

கோலம் போடுவதால் மனதுக்கு உற்சாகம், நினைவாற்றல் எல்லாம் கிடைக்கிறது. மனஒருமைப்பாடு இருந்தால் தான் புள்ளிகளை சரியாக இணைத்து கோலம் போடமுடியும். நம் மனதை பிரதிபலிப்பது தான் கோலம். கோலம் மனமகிழ்ச்சியை தரும்





மார்கழி மாதத்தில் பிள்ளையார் பிடித்து கோலம் போடுவது ஏன்?!!

தமிழ் வருடத்தின் ஒன்பதாவது மாதம் மார்கழி ஆகும். இம்மாதம் தனுர் மாதம் என்றும் அழைக்கப்படுகிறது. அந்த வகையில் பெண்கள் மார்கழி மாதம் முழுவதும் வாசலில் கோலமிட்டு சாணத்தால் பிள்ளையார் பிடித்து வைப்பது ஏன் என்பதற்கான விளக்கத்தை தெரிந்து கொள்வோம்.

மார்கழி மாதம் முழுவதும் அதிகாலையில் எழுந்து குளிர்ந்த நீரில் குளித்துவிட்டு வாசலில் வண்ணக்கோலம் இட்டு இறைவழிபாடு செய்வது வழக்கமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பின்னர் அதில் சாணத்தை பிள்ளையாராக பிடித்து வைத்து, அதன் மேல் பூசணிப்பூவை அழகுபடவைப்பார்கள்.

அதன்பிறகு அதைச் சேகரித்து வீட்டு முற்றத்தில் பொங்கலிட்டு வழிபடுவார்கள். இதனைச் சிறு வீட்டு பொங்கல் என அழைப்பர். பின்னர் சேகரித்த சாண உருண்டைகளை நீர் நிலைகளில் சேர்ப்பார்கள்.

மார்கழி மாதத்தில் வீட்டின் வாசலில் சாணம் பிடித்து வைப்பதற்கு ஒரு முக்கிய கதை உண்டு.

பாரதத்தில் பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் குருஷேத்திர யுத்தம் மார்கழி மாதத்தில் தான் நடந்தது. பாண்டவர்கள் சேனைகள் தங்கியிருந்த வீடுகளை அடையாளம் கண்டு கொள்வதற்காக வியாசர் வீட்டுவாசலில் சாணம் இட்டு பூ வைப்பதற்கான ஏற்பாடுகளை செய்தாராம்.

அதை அடையாளமாக கொண்டு போர் நடக்கும் சமயத்தில் பாண்டவர்களுடைய சேனைகளின் வீடுகளை கௌரவர்கள் தாக்காமல் இருப்பதற்காக கண்ணபிரான் பாதுகாப்பு அளித்தார். அன்று முதல் இந்தப்பழக்கம் தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

மேலும் பெண்கள் வாசலில் அரிசி மாவினால் கோலம் போடுவதால், மழையினால் உணவுக்கு வழியின்றி இரவு முழுவதும் அடைந்து கிடக்கும்

சிறு உயிரினங்கள் அதிகாலையில் வெளிவந்து தமக்குத் தேவையான உணவாக அரிசி மாவைத் தேடி வந்து உண்ணும்.

என்ன கோலம் போட்டால் என்ன பலன் கிடைக்கும்!!

நம் கலாச்சாரத்தில் வீட்டின் முன்பு, சாணம் தெளித்து கோலம் போடுவது வழக்கமாக உள்ளது. குறிப்பாக, கடும் பனி பெய்யும் மார்கழி மாதத்தில் இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. கோலம் போடுவதற்கும் நம் வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. கோலம் போடுவது பூமிக்கு செய்யும் மரியாதை ஆகும்.

கோலம் போடும் போது கோடுகள் கோணல் மாணலாக இருந்தாலும் போட்டு முடித்தபின்பு எப்படிக் கோலாகலமாக அழகுடன் இருக்கிறதோ அதுபோல தான் கோலம் போடும் வீட்டினையும் மகாலட்சுமி தன் அருட்பார்வையால் நிறைப்பாள் என்பது ஐதீகம்.

தெய்வீக யந்திரங்களுக்கு சமமான கோலங்களை பூஜை அறையில் மட்டுமே போட வேண்டும். ஹ்ருதய கமலம், நவகிரக கோலங்கள், ஐஸ்வர்யக் கோலம், ஸ்ரீசக்ரக் கோலம் போன்றவை யந்திரம் போன்றவைகள். இவற்றை மஞ்சள் பொடியினாலும், அரிசி மாவினாலும் மட்டுமே போடுவது சிறப்பு.

அழகுக்காக வண்ணப் பொடிகளைப் பயன்படுத்தினாலும் கோலத்திற்கு உரிய தெய்வம் அல்லது கிரகத்திற்கு உரிய வண்ணத்தில் போடலாம். இத்தகைய கோலங்களால் தெய்வீக அருள் நிரம்பும் தோஷங்கள் விலகும்.

சுப காரியங்களுக்காகப் போடப்படும் கோலங்கள் கண்டிப்பாக இரட்டை இழைக்கோலங்களாகத்தான் இருக்க வேண்டும் ஒற்றை இழை ஒருபோதும் கூடாது.

வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும் சமயத்தில் போடும் கோலங்களுக்கு காவியால் அழகூட்டுவது சிறப்பானது. இப்படிப் போடுவதால் மங்கலம் உண்டாகும். வீட்டு வாசலில் போடும் கோலங்களில் தெய்வீக வடிவங்கள்

இடம்பெறக் கூடாது. புனிதமான பொருட்களின் வடிவங்களை வரைவதை தவிர்ப்பது நல்லது. அவற்றை பூஜை அறையில் அல்லது வீட்டிற்குள்ளே போடலாம்.

படிக்கோலத்தின் நான்கு மூலைகளிலும் போடும் தாமரை, திசை தெய்வங்களின் ஆசியைப் பெற்றுத்தரும். வாசல் படிகளில் குறுக்குக் கோடுகள் போடுவதைத் தவிர்ப்பது நல்லது.

கோலத்தின் தொடக்கமும் முடிவும் கோலத்தின் மேற்புறமாக அமையும்படி போடுவது அவசியம். அவ்வாறு போட்டால் ஏறு முகமான பலனை தரும். கோலத்தில் இடப்படும் காவி நிறம் சிவ சக்தி ஐக்கியத்தை உணர்த்துகிறது. இதுபோன்று கோலத்தை வீட்டில் போட்டு வந்தால், சகல நன்மையும் கிடைக்கும்.





மார்கழி மாதத்தில் ஏன் திருமணம் செய்யக்கூடாது?

மார்கழி மாதம் நம் உடம்பை திடப்படுத்திக் கொள்ளவும், ஆற்றலைப் பெருக்கி சேமித்துக் கொள்ளவும், உடலில் சமன்பாட்டைக் கொண்டு வரவும் சாத்தியமான காலம் ஆகும். ஏனெனில் மார்கழி மாதம் மனித உடலின் சக்தி மையம் கீழிலிருந்து மேல்நோக்கி ஈர்க்கப்படுகிறது.

மார்கழியில் பூமியின் வடபாதியில் புவிஈர்ப்பு விசை குறைவாகவே

இருக்கும். இந்நிலையில் விதைவிதைத்தால் அது முளைக்காது.

உயிர்சக்தி மந்தமாயிருக்கும். இயற்கைக்கே இந்நிலை என்றால் மனிதனின் நிலை என்னவாகும். ஆதலால் தான் இம்மாதத்தில் திருமணம் போன்ற சுபநிகழ்வுகளை நம் முன்னோர் மேற்கொள்ளாமல் இம்மாதத்தை வழிபாட்டிற்கென்றே ஒதுக்கி வைத்தனர்.

ஆதலால் தான் பனிரெண்டு மாதங்களில் வழிபாடுகளுக்கென்றே தனியாக ஒதுக்கப்பட்ட இம்மார்கழி மாதத்தில் நம் முன்னோர் சுபநிகழ்ச்சிகளை நிகழ்த்துவதில்லை. எனினும் அதற்கான முன்னேற்பாடுகளான பெண்பார்த்தல் போன்ற சுபநிகழ்ச்சிகளை நடத்தலாம் என ஜோதிட வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.

மார்கழி மாதத்தில் சூரியசக்தி கீழ்நோக்கி செயல்படுவதால் மனநோயாளிகள் தங்கள் மனநிலையில் சமநிலைக்கு கொண்டுவருவதற்கு உகந்த நேரமும் இதுதான். நம் உடலை நாம் பாதுகாக்கத் தவறினால் உடம்பின் நீராதார சமநிலையில் மாற்றம் ஏற்பட்டு அது மனநிலையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதற்காக பிரம்ம முகூர்த்தத்தில் மூழ்கி நீராடினால் உடல் வலிமை பெறும்.

மார்கழி மாதமானது இயல்பாகவே நமது உடம்பில் ஒரு உறுதியான நிலையையும், மன அமைதியையும் கொடுக்கிறது. இந்த மார்கழி மாதம் ஸ்திரமாக(உறுதி) இருப்பதற்கும், அடுத்து வரும் தை மாதம் நகர்ந்து முன்னேறுவதற்கும் பயன்படுகிறது. உடல் நிலை திடமாக இருந்தால்தான் வாழ்க்கையை சுலபமாக பயணிக்கத் துணிவு வரும். எனவே மார்கழி உடம்பை திடப்படுத்தவும், சமநிலைக்கு கொண்டு வரவும் உதவுகிறது.

மார்கழியை பொறுத்தவரை பருவநிலை மாற்றம் ஏற்படும். குறிப்பிட்ட வகைப் பயிர்கள் அறுவடைக்காக காத்திருக்கும். எனவே இதனை அறுவடைக் காலமாகவும் முன்னோர்கள் கருதினர். இது போன்ற காரணங்களால் தான் திருமணத்தை இந்த மாதத்தில் நடத்தாமல் இருந்தனர்.

சிரஞ்சீவியான அஞ்சனை மைந்தனின் ஜெயந்தி...!!



நமது புராணங்கள், இதிகாசங்களில் எத்தனையோ வீர புருஷர்கள் இருந்தாலும், ஒரு சிலர் மட்டும் பல நூற்றாண்டுகள் கடந்தாலும் மக்களின் மனதில் தங்களின் சிறந்த குணங்களால் நிலைத்து நிற்கின்றனர். அப்படிப்பட்ட ஒரு காவிய நாயகன் தான் “ஸ்ரீ ஆஞ்சநேயர்” ஆவார்.

அஞ்சனை மைந்தன், வாயுபுத்திரன் அனுமன் சிரஞ்சீவியாக இந்த மண்ணில் இருக்கிறார். ராம நாமம் கேட்கும் இடங்களில் ஆஞ்சநேயர் அமர்ந்திருப்பார் என்று நம்பப்படுகிறது. ராமாயண காவியத்தில் ஈடு இணையற்ற இடத்தைப் பிடித்தவர் அனுமன். அறிவு, உடல் வலிமை, துணிச்சல், புகழ், ஆரோக்கியம், வாக்கு சாதுரியம், வீரம் ஆகிய அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்றவர் ராமபிரானின் சேவகன் அனுமன்.

மார்கழி மாதம் என்று சொன்னாலே சிறப்பு தான். திதிகளில் புண்ணியமான திதி அமாவாசை. அறிவு, ஞானத்தின் அடையாளமாக திகழ்வது மூல நட்சத்திரம். சிறப்பு மிகுந்த மாதமான மார்கழியில் அமாவாசை திதியும், மூல நட்சத்திரமும் இணைந்திருக்கும் நாளில்

அஞ்சனையின் மகனாக அவதரித்தவனே ஆஞ்சநேயர். இவர் பிறந்த தினம் அனுமன் ஜெயந்தியாக நாடெங்கும் கொண்டாடப்படுகிறது.

அனுமன் ஜெயந்தியன்று ஆஞ்சநேயரை வழிபட்டால் சிவனையும், பெருமாளையும் சேர்த்து வழிபட்ட புண்ணியம் கிடைக்கும்.

பஞ்ச பூதங்களையும் தன்னுள்ளடக்கிய ஆஞ்சநேயர் எங்கும், எதிலும் அடங்குவதில்லை. ராமா என்ற இரண்டு எழுத்தில் மட்டும் கட்டுண்டு கிடக்கிறார். அவர் அவதரித்த நாளில் ராம நாமம் ஜெபித்தால் நினைத்த காரியம் நிறைவேறும்.

எவர் ஒருவர் ஸ்ரீராமரையோ அல்லது ஆஞ்சநேயரையோ மனமுருகி வேண்டினாலும் அவர்களைக் காக்கும் பெரும் பொறுப்பை அனுமன் ஏற்பார்.

வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் அனுமன் விரதம் இருப்பது சிறப்பானது. எல்லா நாட்களையும் விட அனுமன் ஜெயந்தியில் அவரை வேண்டி விரதம் இருப்பது சகல சௌபாக்கியங்களையும் பெற்றுத் தரும் என்பது நம்பிக்கை.

அனுமனுக்கு வாலில் தான் சக்தி அதிகம். அதனால் தான் ஆஞ்சநேயர் வாலில் குங்குமம் வைத்து வழிபடுகிறோம். பக்தி சிரத்தையுடன் ராம நாமத்தை உச்சரித்துக் கொண்டு வால் தோன்றும் இடத்தில் இருந்து தினமும் சந்தனம் பூசி, குங்கும திலகம் வைத்துக் கொண்டு வர வேண்டும்.

ஆஞ்சநேயரை வழிபடுவதால் வாழ்வில் ஏற்படும் துக்கங்கள், கஷ்டங்கள் நீங்கும். பீடைகள் ஒழியும். கிரக தோஷங்கள் குறிப்பாக சனிக்கிரக தோஷங்கள் நீங்கும். துஷ்ட சக்திகள், செய்வினை மாந்திரீக பாதிப்புகள் நீங்கும்.

தொழில், வியாபார முடக்க நிலை நீங்கி நல்ல லாபம் கிடைக்கும். திருமண பாக்கியம், குழந்தைப்பேறு மற்றும் எடுக்கும் முயற்சிகளில் வெற்றி போன்ற நன்மைகள் கிடைக்கும்.

ஆஞ்சநேயருக்கு ஸ்ரீராம ஜெயம் எழுதி மாலையாக போட்டால் அனைத்து செயலும் வெற்றியாகவே முடியும்.

ஆஞ்சநேயருக்கு வெண்ணெய் சாற்றினால் குழந்தை பாக்கியமும், துளசி மாலை சாற்றினால் பாவங்களில் இருந்து நிவர்த்தியும், வடை மாலை சாற்றினால் வழக்குகளில் வெற்றியும், வெற்றிலை மாலை சாற்றினால் திருமணத்தடை நீங்கி கன்னிப் பெண்களுக்கு விரைவில் திருமணமும் நடக்கும்.

ஓம் ஆஞ்சநேயாய வித்மஹே,

வாயுபுத்ராய தீமஹி,

தந்தோ அனுமன் ப்ரசோதயாத்

என்ற அனுமன் காயத்ரி மந்திரத்தை உச்சரித்து சகல பாவங்களில் இருந்தும், கஷ்டங்களில் இருந்தும் நிவர்த்தி பெறலாம்.

வானளாவிய பெருமைகளைக் கொண்ட ராம பக்தரான ஆஞ்சநேயரை அனுமன் ஜெயந்தி அன்று வணங்கி அவரது அருளை பெறுவோம்.





வைகுண்ட ஏகாதசி..!

மார்கழி மாதத்தில் வரும் வளர்பிறை ஏகாதசி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. திருமங்கையாழ்வார் மார்கழி மாதத்தில் வரும் ஏகாதசியை வைகுண்ட ஏகாதசி உற்சவமாகக் கொண்டாட ஏற்பாடு செய்தார்.

ஏகாதசி என்ற சொல்லுக்குப் பதினோராம் தினம் என்று பொருள். ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, மனம் ஒன்று ஆகிய பதினொன்றையும் பெருமாளுடன் ஐக்கியப்படுத்தித் தியானம் இருப்பதே ஏகாதசி விரதம். உடலாலும், உள்ளத்தாலும் பெருமாளுடன் ஒன்றியிருப்பதே உண்மையான உபவாசம் ஆகும்.

இத்தகைய பெருமைக்குரிய மார்கழி மாதத்தில் தான் வைகுண்ட ஏகாதசி என்று சொல்லப்படுகின்ற சொர்க்கவாசல் திறப்பு நிகழ்வு நடைபெறுகிறது. ஆண்டு முழுவதும் அடைத்து வைத்திருக்கும் கதவு வைகுண்ட ஏகாதசியான இன்று மட்டும் தான் திறந்து வைக்கப்படும். சொர்க்க வாசலின் வழியாக நாம் நுழைந்து வந்தால் சிக்கல்கள் தீரும். செல்வ வளம் பெருகும்.

விஷ்ணுபகவான் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது, அவருடைய இரு காதிலிருந்து மது, கைடபர் என்ற இரு அசுரர்கள் தோன்றினார்கள். அந்த இருவரும் தேவர்களை மிகவும் துன்புறுத்தி வந்தார்கள். இந்த அசுர சகோதரர்களை அடக்க விஷ்ணுபகவான் ஒருவரே என்ற முடிவில் தேவர்கள் முறையிட, பெருமாள் அசுர சகோதரர்களுடன் போர் புரிந்தார். விஷ்ணுவிடம் அசுர சகோதரர்கள் சரண் அடைந்தார்கள்.

பகவானே! தங்களின் சக்தியால் உருவான எங்களுக்கு நீங்கள் தான் கருணை காட்ட வேண்டும் என்று கேட்டு வைகுண்டத்தில் பெருமாளுடன் இருக்கும் பாக்கியத்தை பெற்றார்கள். இந்த அசுர சகோதரர்கள், தங்களை போல் பலரும் இந்த பாக்கியம் பெற வேண்டும் என்று எண்ணி பெருமாளிடம் வேண்டினார்கள்.

எம்பெருமானே! தாங்கள் வைகுண்ட ஏகாதசி நாளில் திருவரங்க வடக்கு வாசல் வழியாக, அர்ச்சாவதாரத்தில் வெளிவரும்போது, தங்களை தரிசிப்பவர்களுக்கும், அவர்கள் செய்த பாவங்கள் யாவும் நீக்கி அவர்களுக்கு முக்தி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர் அசுர சகோதரர்கள்.

அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, வைகுண்ட ஏகாதசியன்று சொர்க்கவாசல் திறக்கப்பட்டு, பெருமாள் பவனி வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அனைத்து விஷ்ணு ஆலயங்களிலும் ஏகாதசி விழா உற்சவம் சீரும் சிறப்புமாக நடைபெறும். இந்த கண்கொள்ளாக் காட்சியை நாம் கண்டு மகிழ்ந்தால் பொன்னும், பொருளும் சேரும். மேலும் செல்வாக்கு உயரும்.

பதினாறு பேறுகளுக்கும் சொந்தக்காரரான விஷ்ணுவை 'பெருமாள்' என்று அழைக்கின்றோம். பெருமாளை வழிபட்டால் நமக்குப் பதினாறு விதமான பேறுகளும் வந்து சேரும் என்பதை அனுபவத்தில் காணலாம்.

வருடம் முழுதும் ஏகாதசி விரதம் அனுஷ்டிக்க இயலாதவர்கள், மார்கழி மாதத்தில் வரும் வைகுண்ட ஏகாதசியில் மட்டுமாவது விரதம் மேற்கொள்வது சிறப்பான பலன் தரும்.

மூன்று கோடி ஏகாதசிகளில் விரதம் இருந்த பலனைத் தரக்கூடியது என்பதால் வைகுண்ட ஏகாதசி 'முக்கோடி ஏகாதசி' என்றும் அழைக்கப்படுகிறது. வைகுண்ட ஏகாதசியன்று விரதம் இருப்பவர்களுக்கு, மறுபிறப்பே இல்லை என்று பக்தர்கள் கருதுகின்றனர். ஏகாதசி விரதம் இருந்தால் வைகுண்டத்திற்கே வழி கிடைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது.

மாதத்தில் வரும் வைகுண்ட ஏகாதசியில் மட்டுமாவது விரதம் மேற்கொள்வது சிறப்பான பலன் தரும்.





திருவாதிரை விரதமும், ஆருத்ரா தரிசனமும்..!

மார்கழி திருவாதிரை விரதம் :

மார்கழி திருவாதிரை என்பது மார்கழி மாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்தோடு கூடிய பௌர்ணமியில் கடைபிடிக்கப்படும். திருவாதிரை நோன்பு (விரதம்) என்பது திருவாதிரை நட்சத்திரத்தோடு கூடிய பௌர்ணமி நாளில் உபவாசம் இருந்து நோற்கும் ஒரு நோன்பாகும்.

மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நட்சத்திரத்தன்று (திருவாதிரை தரிசனம்) காட்சி தரும் கடவுளை கண்டு களித்தால் வீழ்ச்சியில்லாத வாழ்க்கை அமையும். திருவாதிரை தரிசனத்தை, ஆருத்ரா தரிசனம் என்றும் சொல்வார்கள். அன்றைய தினம் சகல சிவாலயங்களிலும் நடராஜருக்கு அபிஷேகம் செய்வதும், ரிஷப வாகனத்தில் ஈஸ்வரனும், ஈஸ்வரியும் திருவீதி உலா வருவதும் விழாவாக நடைபெறும்.

திருவெம்பாவை வழிபாட்டுக்குரிய பத்துத் தினங்களின் இறுதி நாளாகவும் மார்கழி திருவாதிரை அமைகின்றது. சிவனுக்குரிய நட்சத்திரம் திருவாதிரை ஆகும். இவ்விரதம் சிவனுக்கு மிகவும் உகந்தது. இதனை கொண்டுதான் சிவபெருமானை ஆதிரையின் முதல்வன் என்றும் ஆதிரையான் என்றும் கூறுவர்.

ஆருத்ரா தரிசனம் :

'கர்மாவே பெரிது, கடவுள் இல்லை' என்று கூறிய முனிவர்களின் அறியாமையை நீக்கிட வந்த சிவன் தனக்கு எதிராக ஏவப்பட்ட யானையை தன் ஆடையாக்கி, உடுக்கை, பாம்பு முதலியவற்றை ஆபரணமாகக் கொண்டு நடராஜராக ஆருத்ரா தரிசன காட்சி தந்த நாள்தான் மார்கழி திருவாதிரை. அன்று தான் தில்லையில் நடராஜர் வ்யாகரபாத முனிவருக்கு நடன தரிசனம் தந்தார்.

அதனால் மார்கழி மாதம் திருவாதிரை நாளன்று நடராஜருக்குச் சிறப்பு வாய்ந்தது. அவற்றுள் சிதம்பரத்தில் நடப்பது மிகவும் சிறப்புடையது. திருவாதிரை தினத்தில் தில்லை நடராஜப் பெருமான் ஆரோகணித்து தேரில் வீதி வலம் வரும் காட்சி அற்புதக் காட்சியாகும். இதைத்தான் ஆருத்ரா தரிசனம் என்று கூறுவர்.

ஆருத்ரா என்பது ஆதிரையைக் குறிக்கும் சொல். இக்காட்சியைக் கண்டு தரிசிக்க பிறநாடுகளில் இருந்து அடியார் கூட்டம் தொன்று தொட்டு இங்கு செல்வது வழக்கம். சிதம்பரத்திலுள்ள நடராஜப் பெருமானைத் தரிசித்தால் முக்தி கிடைப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

மார்கழி மாதம் திருவாதிரை, திருவெம்பாவை நோன்பினாலும், விநாயகர் சஷ்டி விரதத்தாலும் பெருமை பெறுகின்றது. சொர்க்க வாயிலில் ஏகாதசி விரதம் மார்கழியில் தான் கடைபிடிக்கப்படுகின்றது.

கண்ணன் கீதையில் மாதங்களில் நான் மார்கழி என்று கூறியுள்ளார். ஆண்டாளும் தனது திருப்பாவையில் மார்கழி மாதத்து மதி நிறைந்த நன்னாள் என வர்ணிக்கின்றார்.

சிவபெருமான் நெருப்பு உருவமாக தன்னை வெளிப்படுத்திக் காட்டியது சிவராத்திரி நன்னாள். சிவபெருமான் இப்பூமியில் ஆவிர்பரித்து நின்ற (தோற்றுவித்த) நாள் ஆருத்ரா நன்னாள்.



திருவாதிரை விரதம்.!!

மார்கழி மாத திருவாதிரை தினத்தில் சிவபெருமானை பூஜித்து வழிபட்டால், நல்ல கணவன் கிடைப்பார். மாங்கல்யப் பலன் பெருகும். பாவங்கள் நீங்கும், அறிவும் ஆற்றலும் கூடும் என்பன போன்ற எண்ணற்ற பலன்களைக் கொடுக்கும் விரதமாக இது உள்ளது.

மார்கழி திருவாதிரை நாளில், சுவாமிக்கு களி படைத்து குழந்தைகளுக்கு வழங்கலாம். அன்று முழுவதும் சிவபுராணம், தேவாரம், திருவாசகத்தை பக்தியுடன் படிக்க வேண்டும். இரவில் எளிய உணவு சாப்பிட்டு விரதத்தை முடிக்கலாம். சிவபெருமான் அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூன்று வடிவம் கொண்டவர். இம்மூன்று வடிவங்களிலும் சிவபெருமான் அருள்புரியும் தலம் சிதம்பரம் தான்.

தில்லை நடராஜருக்குக் களி மிகவும் பிடிக்க காரணம் :

தில்லையில் சேந்தனார் என்னும் சிவ பக்தர் வாழ்ந்து வந்தார். அவர் விறகு வெட்டி, விற்று தன் குடும்பத்தை நடத்தி வந்தாலும், தினமும் சிவபூஜை செய்யத் தவற மாட்டார். அதுமட்டுமில்லாமல் தன்னை நாடி வரும் சிவனடியார்களுக்கு விருந்தளித்து மகிழ்வார். சிவனடியார்கள் உணவு உண்பது சிவபெருமானே நேரில் வந்து உண்பதாக நினைத்து மகிழ்வார்.

ஒருநாள் திருவாதிரைத் திருநாளுக்கு முதல் நாள் இரவிலிருந்து கடுமையாக மழை பெய்து கொண்டிருந்தது, தொடர் மழையால் எங்கும் வெளியில் விறகு வெட்டச் செல்ல முடியாமல் சேந்தனார் தவித்தார். அதனால் வீட்டில் சமைப்பதற்கு எந்தப் பொருளும் இல்லை. காட்டிற்குச் சென்று விறகு வெட்டிக் கொண்டு அதை விற்று வந்தால் தான் அன்றைக்கு உணவு.

அதனால் சிவனடியார் யாராவது வந்தால் என்ன செய்வது? அவர்களை எப்படி உபசரிப்பது? என்று அவர் மனைவியும் சேந்தனாரும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது, அவர்கள் வீட்டின் வாசல் முன், திருச்சிற்றம்பலம்! சம்போ மகா தேவா... என்ற குரல் கேட்டது. வெளியில் சிவனடியாரை பார்த்ததும் அவரை மகிழ்வுடன் வீட்டிற்குள் அழைத்து, அவருக்கு ஆசனம் அளித்து பணிவிடை செய்தார்கள்.

சிவனடியாரின் பசியைப் போக்க வீட்டில் சமைப்பதற்கு ஒன்றும் இல்லை என்பதால், சேந்தனாரின் மனைவி, வீட்டில் இருந்த சிறிதளவு அரிசிமாவில் வெல்லப் பாகு தயாரித்துக் கலந்து களி கிளறினாள். சிவனடியாரும் அவர்கள் கொடுத்த களியை உண்டு, மகிழ்வுடன் அவர்களை வாழ்த்தி, விடை பெற்றுச் சென்றார்.

மறுநாள் காலை சேந்தனாரும், அவர் மனைவியும் ஸ்ரீநடராஜப் பெருமானைத் தரிசிக்க சிவாலயம் சென்றார்கள். அங்கு கோயிலைத் திறந்த தில்லை வாழ் அந்தணர்கள், இறைவன் சன்னதியில் களி சிதறிக் கிடப்பதைக் கண்டு வியந்தார்கள். சேந்தனாரும் அவர் மனைவியும் இறைவன் முன் களி சிதறிக் கிடப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். சேந்தனாரும், தமது வீட்டிற்கு சிவனடியார் வந்ததையும், அவருக்குக் களி கொடுத்து உபசரித்ததையும் அந்தணர்களிடம் கூற, இது நடராஜப் பெருமானின் திருவிளையாடல் என்பதை அறிந்து, சேந்தனாரையும் அவரது மனைவியையும் போற்றி மகிழ்ந்தார்கள்.

அன்றிலிருந்து மார்கழி திருவாதிரைத் திருநாளில் களி செய்து ஸ்ரீநடராஜப் பெருமானுக்கு நிவேதனம் செய்வது வழக்கமாகிவிட்டது

என்று புராணம் கூறுகிறது. எனவே திருவாதிரை விரதம் மேற்கொண்டு திருவாதிரைக் களியை உண்பவர் சொர்க்கம் செல்வார்கள் என்பது நம்பிக்கை.

மார்கழி மாதத்தில் என்னென்ன செய்யலாம்? என்னென்ன செய்யக்கூடாது?

மார்கழி மாதம் மிகவும் மகத்துவம் நிறைந்த மாதமாகும். வருடம் முழுவதும் கோவிலுக்கு செல்ல இயலாதவர்கள், மார்கழி மாதம் மட்டும் கோவிலுக்கு சென்றாலே வருடம் முழுவதும் கோவிலுக்கு சென்ற பலன் கிடைத்துவிடும்.

மார்கழி மாதம் என்றவுடன் அனைவருக்கும் நினைவில் வருவது பனி. அதிகாலையில் புகைப்போல் படரச் செய்து, சூரியன் வருகையை ஸ்பெஷலான காட்சியாக்கிவிடும்.

இவ்வாறு தெய்வீகமாக கருதப்படும் மார்கழி மாதத்தில் என்ன செய்யலாம்? என்ன செய்யக்கூடாது? என்பதை தெரிந்து கொள்வோம்...!!

மார்கழியில் செய்யக்கூடியவை :

மார்கழி மாதம் பிரம்ம முகூர்த்தத்திலேயே கண் விழிக்க வேண்டும்.

மார்கழி மாதம் விரதம் இருந்து விஷ்ணுவை வழிபட்டால் தோஷங்கள் நீங்கி செல்வ செழிப்பு உண்டாகும்.

அதிகாலையில் எழுந்து குளித்து முடித்து, வாசலில் வண்ணக்கோலமிட்டு இரண்டு அகல் விளக்குகளை வைக்க மகாலட்சுமியின் அருள் அதிகாலையிலேயே கிடைத்துவிடும்.

ஆண்டாள், பெருமாள் படம் வைத்து உதிரிப்பூ தூவி காலையும், மாலையும் வழிபட வேண்டும்.

அதிகாலையில் பஜனை பாடுவதுடன், திருப்பாவை, திருவெம்பாவை பாடல் பாடுவதும், கேட்பதும் புண்ணியம். இல்லாவிட்டால் கோலம் போடும் நேரத்தில் மட்டுமாவது பாட வேண்டும்.

மார்கழி மாதத்தில் திருமணத்திற்கு வரன், பொருத்தம் பார்ப்பதோடு ஜாதக பரிமாற்றமும், கர்ப்பிணி பெண்களுக்கு சீமந்தமும் செய்யலாம்.

மார்கழி மாதத்தில் நிலம் மற்றும் வீடு வாங்க முன்பணம் கொடுப்பதோடு பத்திர பதிவும் செய்யலாம்.

மார்கழியில் செய்யக்கூடாதவை :

முதல் நாள் இரவே கோலம் போடுவதை தவிர்க்க வேண்டும்.

மார்கழியில் விதை விதைக்கக்கூடாது.

சூரிய உதயத்திற்கு பின்பு தூங்கக்கூடாது.

மார்கழி மாதம் விரதம் மேற்கொள்ளும் கன்னிப்பெண்கள் நெய், பால் சேர்த்த உணவை சேர்க்கக்கூடாது.

மார்கழி மாதத்தில் புதுமனை புகுவிழா, வாடகை வீடு மாறுதல், அலுவலகம் மாறுதல், திருமணம் மற்றும் நிச்சயதார்த்தம் செய்தல், காது குத்துதல், புதிய வீடு மற்றும் புதிய வாகனமும் வாங்கக்கூடாது.



மார்கழி மாதத்தில் பிறந்தவர்களின் குணங்கள்!

மார்கழி மாதத்தில் பிறந்தவர்கள் நல்ல உள்ளம் கொண்டவர்களாக இருப்பார்கள். இவர்கள் சுதந்திர வாழ்க்கை வாழவே அதிகம் விரும்புவார்கள். முன்கோபமும், பிடிவாத குணமும் கொண்டவராக இருப்பார்கள்.

ஆடம்பர பிரியர்கள். ஒரே இடத்தில் தங்கியிருப்பது இவர்களால் இயலாத காரியம். கடவுள் மீது அதிக பக்தி கொண்டவர்கள்.

பிறர் செய்யும் தவறுகளை பயமில்லாமல் துணிச்சலுடன் சுட்டி காட்டும் குணம் கொண்டவர்கள். இவர்களைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றி சிறிதும் யோசிக்கமாட்டார்கள். நண்பர்களுக்காக எதையும் செய்யும் குணம் கொண்டிருப்பார்கள்.

இம்மாதத்தில் பிறந்தவர்கள் நேர்மைக்கும், நியாயத்திற்கும் கட்டுப்பட்டு நடக்கக்கூடியவர்கள். தீயவர்களுடன் நட்பு வைத்துக் கொள்ளமாட்டார்கள். எதையும் கூர்ந்து கண்காணிப்பதில் வல்லவர்கள். அனைவருக்கும் தம்மால் முடிந்த நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று நினைப்பார்கள்.

இவர்கள் செய்யும் எந்த ஒரு விஷயத்திலும் தனித்தன்மை நிறைந்திருக்கும். ஆகையால் ஒரு தொழிலை இவரை நம்பி ஒப்படைத்தால் தொழில் விருத்தியடையும்.

இவர்கள் இளம் வயதிலேயே உலக அனுபவங்களைப் பெற்றிடுவார்கள். நல்ல நூல்களை தேர்ந்தெடுத்து படிப்பதில் ஆர்வம் கொண்டிருப்பார்கள்.

இம்மாதத்தில் பிறந்தவர்கள் சிறந்த எழுத்தாற்றல் பெற்றிருப்பார்கள். ஆகையால் இவர்கள் ஒரு சிறந்த எழுத்தாளராகவும் வர வாய்ப்புகள் அதிகம் உள்ளது. இவர்கள் எழுதும் எழுத்துக்களுக்கு வலிமை அதிகமாக இருக்கும். இவர்கள் படிப்பில் அதிக ஆர்வம் கொண்டிருப்பார்கள்.

இவர்கள் எந்த ஒரு செயலை செய்தாலும் அதை செய்து முடித்துவிட

வேண்டும் என்ற குணம் கொண்டிருப்பார்கள். அதே சமயம்

இவர்களுடைய வாழ்வில் ஏதேனும் பிரச்சனைகள் வந்துவிட்டால், அந்த பிரச்சனைகளை கண்டு துவண்டு விடுவார்கள்.

இம்மாதத்தில் பிறந்தவர்கள் பிறருக்கு அறிவுரை சொல்வதில் வல்லவர்கள். ஆனால், இவர்கள் வாழ்க்கையின் முற்பகுதியில் ஆடம்பர செலவுகள் செய்துவிட்டு, வாழ்க்கையின் பிற்பகுதியில் அதிகம் சிரமப்படுவார்கள்.

மார்கழி மாதத்தில் பிறந்தவர்கள் எதிர்காலத்தை எண்ணி ஆடம்பர செலவுகளை குறைத்துக் கொண்டால் வாழ்க்கை சிறப்பாக இருக்கும்.



மார்கழி மாத சுப தினங்கள்

(சுபமுகூர்த்த நாட்கள் திருக்கணித பஞ்சாங்கத்தில் அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளது)

திருமணம் செய்ய உகந்த நாட்கள்

மார்கழி 03 18.12.2024 புதன்
மார்கழி 07 22.12.2024 ஞாயிறு
மார்கழி 10 25.12.2024 புதன்
மார்கழி 17 01.01.2025 புதன்
மார்கழி 18 02.01.2025 வியாழன்
மார்கழி 19 03.01.2025 வெள்ளி
மார்கழி 22 06.01.2025 திங்கள்
மார்கழி 28 12.01.2025 ஞாயிறு

கல்வி ஆரம்பம் செய்ய உகந்த நாட்கள்

மார்கழி 03 18.12.2024 புதன்
மார்கழி 07 22.12.2024 ஞாயிறு
மார்கழி 10 25.12.2024 புதன்
மார்கழி 17 01.01.2025 புதன்
மார்கழி 18 02.01.2025 வியாழன்
மார்கழி 19 03.01.2025 வெள்ளி
மார்கழி 22 06.01.2025 திங்கள்
மார்கழி 28 12.01.2025 ஞாயிறு

கடன் அடைக்க உகந்த நாட்கள்

மார்கழி 02 17.12.2024 செவ்வாய்
மார்கழி 04 19.12.2024 வியாழன்
மார்கழி 06 21.12.2024 சனி
மார்கழி 09 24.12.2024 செவ்வாய்
மார்கழி 13 28.12.2024 சனி
மார்கழி 19 03.01.2025 வெள்ளி
மார்கழி 20 04.01.2025 சனி
மார்கழி 27 11.01.2025 சனி
மார்கழி 28 12.01.2025 ஞாயிறு

சீமந்தம் செய்ய உகந்த நாட்கள்

மார்கழி 03 18.12.2024 புதன்
மார்கழி 07 22.12.2024 ஞாயிறு
மார்கழி 10 25.12.2024 புதன்
மார்கழி 17 01.01.2025 புதன்
மார்கழி 18 02.01.2025 வியாழன்
மார்கழி 19 03.01.2025 வெள்ளி
மார்கழி 22 06.01.2025 திங்கள்
மார்கழி 28 12.01.2025 ஞாயிறு

சுதர்சன ஹோமம் செய்வதற்கு உகந்த நாட்கள்

மார்கழி 03 18.12.2024 புதன்
மார்கழி 07 22.12.2024 ஞாயிறு
மார்கழி 11 26.12.2024 வியாழன்
மார்கழி 18 02.01.2025 வியாழன்
மார்கழி 26 10.01.2025 வெள்ளி
மார்கழி 29 13.01.2025 திங்கள்

போர் போட உகந்த நாட்கள்

மார்கழி 03 18.12.2024 புதன்
மார்கழி 04 19.12.2024 வியாழன்
மார்கழி 17 01.01.2025 புதன்
மார்கழி 18 02.01.2025 வியாழன்
மார்கழி 22 06.01.2025 திங்கள்
மார்கழி 28 12.01.2025 ஞாயிறு

காதுகுத்து வைக்க உகந்த நாட்கள்

மார்கழி 07 22.12.2024 ஞாயிறு
மார்கழி 10 25.12.2024 புதன்
மார்கழி 17 01.01.2024 புதன்
மார்கழி 18 02.01.2024 வியாழன்
மார்கழி 19 03.01.2024 வெள்ளி
மார்கழி 22 06.01.2024 திங்கள்

மார்கழி மாத சுப தினங்கள்

(சுபமுகூர்த்த நாட்கள் திருக்கணித பஞ்சாங்கத்தில் அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளது)

கணபதி ஹோமம் செய்வதற்கு உகந்த நாட்கள்

மார்கழி 03 18.12.2024 புதன்
மார்கழி 04 19.12.2024 வியாழன்
மார்கழி 07 22.12.2024 ஞாயிறு
மார்கழி 10 25.12.2024 புதன்
மார்கழி 11 26.12.2024 வியாழன்
மார்கழி 12 27.12.2024 வெள்ளி
மார்கழி 17 01.01.2025 புதன்
மார்கழி 18 02.01.2025 வியாழன்
மார்கழி 19 03.01.2025 வெள்ளி
மார்கழி 22 06.01.2025 திங்கள்
மார்கழி 26 10.01.2025 வெள்ளி
மார்கழி 29 13.01.2025 திங்கள்

புதிய வாகனம் ஏற உகந்த நாள்

மார்கழி 03 18.12.2024 புதன்
மார்கழி 07 22.12.2024 ஞாயிறு
மார்கழி 10 25.12.2024 புதன்
மார்கழி 17 01.01.2025 புதன்
மார்கழி 18 02.01.2025 வியாழன்
மார்கழி 19 03.01.2025 வெள்ளி
மார்கழி 22 06.01.2025 திங்கள்
மார்கழி 28 12.01.2025 ஞாயிறு

தொழில் துவங்குவதற்கு உகந்த நாட்கள்

மார்கழி 03 18.12.2024 புதன்
மார்கழி 07 22.12.2024 ஞாயிறு
மார்கழி 10 25.12.2024 புதன்
மார்கழி 17 01.01.2025 புதன்
மார்கழி 18 02.01.2025 வியாழன்
மார்கழி 19 03.01.2025 வெள்ளி
மார்கழி 22 06.01.2025 திங்கள்
மார்கழி 28 12.01.2025 ஞாயிறு

கடன் வாங்க உகந்த நாட்கள்

மார்கழி 03 18.12.2024 புதன்
மார்கழி 07 22.12.2024 ஞாயிறு
மார்கழி 10 25.12.2024 புதன்
மார்கழி 17 01.01.2025 புதன்
மார்கழி 18 02.01.2025 வியாழன்
மார்கழி 19 03.01.2025 வெள்ளி
மார்கழி 22 06.01.2025 திங்கள்
மார்கழி 28 12.01.2025 ஞாயிறு

மாங்கல்யம் செய்ய உகந்த நாட்கள்

மார்கழி 03 18.12.2024 புதன்
மார்கழி 07 22.12.2024 ஞாயிறு
மார்கழி 10 25.12.2024 புதன்
மார்கழி 17 01.01.2025 புதன்
மார்கழி 18 02.01.2025 வியாழன்
மார்கழி 19 03.01.2025 வெள்ளி
மார்கழி 22 06.01.2025 திங்கள்
மார்கழி 28 12.01.2025 ஞாயிறு

புதிய வண்டி வாங்க உகந்த நாட்கள்

மார்கழி 03 18.12.2024 புதன்
மார்கழி 07 22.12.2024 ஞாயிறு
மார்கழி 10 25.12.2024 புதன்
மார்கழி 17 01.01.2025 புதன்
மார்கழி 18 02.01.2025 வியாழன்
மார்கழி 19 03.01.2025 வெள்ளி
மார்கழி 22 06.01.2025 திங்கள்
மார்கழி 28 12.01.2025 ஞாயிறு

சந்திராஷ்டம தினங்கள்

சந்திராஷ்டமம் என்பது அவரவர்களின் ஜென்ம ராசிக்கு மனோகாரகனான சந்திரன் அஷ்டம ஸ்தானம் எனப்படும் எட்டாம் இடத்தில் மறைவதாகும்.

சந்திராஷ்டம தினத்தில் மனதில் இனம்புரியாத கவலைகள் மற்றும் மற்றவர்கள் மீது வெறுப்புணர்ச்சியும், கோபமும் ஏற்படும். சந்திராஷ்டம தினங்களில் வியாபாரம் மற்றும் உத்தியோக நிமித்தமாக புதிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பின்வரும் தினத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ராசிக்காரர்கள் அன்றைய தினத்தில் பொறுமையுடனும், நிதானமாகவும் செயல்படுவதன் மூலம் தேவையற்ற விவாதங்களையும், மன வருத்தங்களையும் குறைத்து கொள்ள இயலும். வாருங்கள் உங்களின் ராசிக்கான சந்திராஷ்டம தினங்களை காண்போம். சந்திராஷ்டம தினங்கள் திருக்கணித பஞ்சாங்கத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மாதம்	ஆங்கில மாதம்	சந்திராஷ்டம ராசிகள்
மார்கழி 01	16.12.2024	இன்று முழுவதும் விருச்சிகம்
மார்கழி 02	17.12.2024	இன்று மாலை 06.47 வரை விருச்சிகம் பின்பு தனுசு
மார்கழி 03	18.12.2024	இன்று முழுவதும் தனுசு
மார்கழி 04	19.12.2024	இன்று முழுவதும் தனுசு
மார்கழி 05	20.12.2024	இன்று அதிகாலை 01.59 வரை தனுசு பின்பு மகரம்
மார்கழி 06	21.12.2024	இன்று முழுவதும் மகரம்
மார்கழி 07	22.12.2024	இன்று பிற்பகல் 12.55 வரை மகரம் பின்பு கும்பம்
மார்கழி 08	23.12.2024	இன்று முழுவதும் கும்பம்
மார்கழி 09	24.12.2024	இன்று முழுவதும் கும்பம்
மார்கழி 10	25.12.2024	இன்று அதிகாலை 01.51 வரை கும்பம் பின்பு மீனம்
மார்கழி 11	26.12.2024	இன்று முழுவதும் மீனம்
மார்கழி 12	27.12.2024	இன்று பிற்பகல் 01.57வரை மீனம் பின்பு மேஷம்
மார்கழி 13	28.12.2024	இன்று முழுவதும் மேஷம்
மார்கழி 14	29.12.2024	இன்று இரவு 11.22 வரை மேஷம் பின்பு ரிஷபம்
மார்கழி 15	30.12.2024	இன்று முழுவதும் ரிஷபம்
மார்கழி 16	31.12.2024	இன்று முழுவதும் ரிஷபம்
மார்கழி 17	01.01.2025	இன்று அதிகாலை 06.01 வரை ரிஷபம் பின்பு மிதுனம்
மார்கழி 18	02.01.2025	இன்று முழுவதும் மிதுனம்
மார்கழி 19	03.01.2025	இன்று காலை 10.47 வரை மிதுனம் பின்பு கடகம்
மார்கழி 20	04.01.2025	இன்று முழுவதும் கடகம்
மார்கழி 21	05.01.2025	இன்று பிற்பகல் 02.35 வரை மிதுனம் பின்பு கடகம்

மார்கழி 22	06.01.2025	இன்று முழுவதும் கடகம்
மார்கழி 23	07.01.2025	இன்று மாலை 05.50வரை கடகம் பின்பு சிம்மம்
மார்கழி 24	08.01.2025	இன்று முழுவதும் சிம்மம்
மார்கழி 25	09.01.2025	இன்று இரவு 08.46 வரை சிம்மம் பின்பு கன்னி
மார்கழி 26	10.01.2025	இன்று முழுவதும் கன்னி
மார்கழி 27	11.01.2025	இன்று இரவு 11.55 வரை கன்னி பின்பு துலாம்
மார்கழி 28	12.01.2025	இன்று முழுவதும் துலாம்
மார்கழி 29	13.01.2025	இன்று முழுவதும் துலாம்

மார்கழி மாத விரத தினங்கள்

விரதத்தின் பெயர்	தமிழ் மாதம்	கிழமை / தேதி	வழிபாடு மற்றும் பலன்கள்
சங்கடஹர சதுர்த்தி	மார்கழி 03	18.12.2024 புதன்	விரதமிருந்து சந்திரனை தரிசனம் செய்த பின்பு விநாயகரை வழிபட்டு பின்பு போஜனம் செய்து வர கவலைகள் குறையும்.
தேய்பிறை சஷ்டி விரதம்	மார்கழி 06	21.12.2024 சனி	விரதமிருந்து முருகரை வழிபாடு செய்து வர செல்வ சேர்க்கையும் உயர் பொறுப்புகளையும் அடைய முடியும்.
தேய்பிறை அஷ்டமி	மார்கழி 08	23.12.2024 திங்கள்	மாலையில் காலபைரவரை வழிபாடு செய்து வர ஆயுள் விருத்தி உண்டாகும்.
தேய்பிறை ஏகாதசி	மார்கழி 11	26.12.2024 வியாழன்	உபவாசம் இருந்து பெருமாளை வழிபட சுபிட்சம் உண்டாகும்.
தேய்பிறை பிரதோஷம்	மார்கழி 13	28.12.2024 சனி	சிவபெருமானை வழிபாடு செய்து வர கர்மவினைகள் குறையும்.
சிவராத்திரி	மார்கழி 14	29.12.2024 ஞாயிறு	சிவபெருமானை வழிபாடு செய்து வர கர்மவினைகள் குறையும்.
அமாவாசை	மார்கழி 15	30.12.2024 திங்கள்	பித்ருக்களுக்கு தர்ப்பணம் அல்லது பித்ருக்களுக்கு படையல் செய்து பசுமாட்டிற்கு அகத்திக்கீரை கொடுத்த பின்பு போஜனம் செய்து வர பிதுருக்களின் ஆசிகள் பரிபூரணமாக கிடைப்பதுடன் முன்னேற்றமான வாழ்க்கை தரும் உண்டாகும்.
சந்திர தரிசனம்	மார்கழி 17	01.01.2025 புதன்	சந்திரனை வழிட முன்னேற்றம் உண்டாகும்.
திருவோண விரதம்	மார்கழி 18	02.01.2025 வியாழன்	உபவாசம் இருந்து மகாவிஷ்ணுவை வழிபாடு செய்து வர பாபங்கள் விலகி உயர்வு உண்டாகும்.
சதுர்த்தி	மார்கழி 19	03.01.2025 வெள்ளி	விரதமிருந்து விநாயகரை வழிபாடு செய்து வர காரிய தடைகள் அகலும். இன்றைய தினத்தில் சந்திரனை தரிசனம் செய்ய கூடாது.
சஷ்டி விரதம்	மார்கழி 21	05.01.2025 ஞாயிறு	விரதமிருந்து முருகரை வழிபாடு செய்து வர செல்வ சேர்க்கையும் உயர் பொறுப்புகளையும் அடைய முடியும்.
அஷ்டமி	மார்கழி 22	06.01.2025 திங்கள்	மாலையில் காலபைரவரை வழிபாடு செய்து வர ஆயுள் விருத்தி உண்டாகும்.
கிருத்திகை விரதம்	மார்கழி 25	09.01.2025 வியாழன்	முருக பெருமானையும் மஹாலட்சுமியையும் வழிபட்டு பின்பு போஜனம் செய்து வர மழலை செல்வமும் ஐஸ்வர்யத்தையும் பெறமுடியும்

மார்கழி மாத விரத தினங்கள்

விரதத்தின் பெயர்	தமிழ் மாதம்	கிழமை / தேதி	வழிபாடு மற்றும் பலன்கள்
ஏகாதசி	மார்கழி 26	10.01.2025 வெள்ளி	உபவாசம் இருந்து பெருமாளை வழிபட வாழ்க்கையில் இருந்து வந்த இன்னல்கள் நீங்கி சுபிட்சம் உண்டாகும்.
சனி மஹா பிரதோஷம்	மார்கழி 27	11.01.2025 சனி	உபவாசம் இருந்து சிவபெருமானை வழிபட கவலைகள் குறையும்.
பௌர்ணமி	மார்கழி 29	13.01.2025 திங்கள்	உபவாசம் இருந்து மாலையில் சந்திரனை வழிபாடு செய்து வர குறைகள் நீங்கி ஐஸ்வர்யத்தையும் பெறமுடியும்.

கார்த்திகை மாத ராசிபலன்கள்



விடாப்பிடியாக செயல்படும் மேஷ ராசி அன்பர்களே..!!



சூரியன் 09ல் இருப்பதால் புத்தி கூர்மையுடன் செயல்பட்டு விரும்பியதை நிறைவேற்றிக் கொள்வீர்கள். ஆன்மிகப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். ஆராய்ச்சி தொடர்பான சிந்தனைகள் மேம்படும். செவ்வாய் 04ல் இருப்பதால் அக்கம், பக்கம் இருப்பவர்கள் ஒத்துழைப்பாக இருப்பார்கள். சிறு தூரப் பயணங்களால் ஆதாயம் அடைவீர்கள்.புதன் 08ல் இருப்பதால் பொறுமைக்கு உண்டான மதிப்புகள் தாமதமாக கிடைக்கும். உயர்கல்வியில் இருந்துவந்த குழப்பங்கள் குறையும்.

01.01.2025 முதல் புதன் 09ல் இருப்பதால் வெளிநாடுகளுக்கு செல்வதற்கான சூழ்நிலைகள் அமையும். வெளியூர் தொடர்பான பயண வாய்ப்புகள் கைகூடும்.

சுக்கிரன் 10ல் இருப்பதால் சமூக பணிகளில் இருப்பவர்களுக்கு மேன்மை ஏற்படும். வியாபார பணிகளில் அரசு சார்ந்த உதவிகள் உண்டாகும்.

30.12.2024 முதல் சுக்கிரன் 11ல் இருப்பதால்பல தரப்பட்ட மக்களின் அறிமுகங்கள் உருவாகும். மனதில் புது விதமான சிந்தனைகள் தோன்றும்.

குரு 2ல் இருப்பதால் புதிய நபர்களின் அறிமுகம் ஏற்படும்.

சனி 11ல் இருப்பதால் இணையம் சார்ந்த துறைகளில் ஆர்வம் அதிகரிக்கும்.

ராகு 12ல் இருப்பதால் பிறமொழி பேசும் மக்கள் ஆதரவாக இருப்பார்கள்.

கேது 06ல் இருப்பதால் எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

வழிபாடு: குலதெய்வ வழிபாடு முன்னேற்றத்தை உருவாக்கும்.



பக்குவம் நிறைந்த ரிஷப ராசி அன்பர்களே. . !!



சூரியன் 08ல் இருப்பதால் செயல்பாடுகளில் ஒருவிதமான ஆர்வமின்மை ஏற்படும். அரசு சார்ந்த செயல்களில் கவனம் வேண்டும். சமூகம் தொடர்பான பணிகளில் விவேகத்துடன் செயல்படவும்.

செவ்வாய் 03ல் இருப்பதால் உள்ளுணர்வு சிந்தனைகள் மூலம் புதிய முடிவுகள் எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்புகள் அதிகரிக்கும்.

புதன் 07ல் இருப்பதால் பள்ளிப் பருவ நண்பர்களின் சந்திப்புகள் ஏற்படும். கணவன் வழியில் ஆதரவு மேம்படும்.

01.01.2025 முதல் புதன் 08ல் இருப்பதால் திறமைக்குண்டான அங்கீகாரங்கள் கிடைக்கும். எதிர்காலம் சார்ந்த சிந்தனைகள் மனதில் அதிகரிக்கும்.

சுக்கிரன் 09ல் இருப்பதால் உடன்பிறந்தவர்கள் ஆதரவாக செயல்படுவார்கள். எதிர்பாராத சில அதிர்ஷ்டகரமான வாய்ப்புகள் உருவாகும்.

30.12.2024 முதல் சுக்கிரன் 10ல் இருப்பதால் குடும்பத்தில் பொறுப்புகள் மேம்படும். உடன் இருப்பவர்கள் பற்றிய புரிதல்கள் அதிகரிக்கும்.

குரு ராசியில் இருப்பதால் மற்றவர்கள் கருத்துக்களுக்கு மதிப்பளித்து செயல்படவும்.

சனி 10ல் இருப்பதால் பெரியோர்களின் ஆலோசனைகள் புதிய தெளிவினை ஏற்படுத்தும்.

ராகு 11ல் இருப்பதால் விலகி இருந்துவந்த உறவினர்கள் விரும்பி வருவார்கள்.

கேது 05ல் இருப்பதால் வரவுகள் தாராளமாக இருந்தாலும் அதற்கேற்ப செலவுகளும் உண்டாகும்.

வழிபாடு: துர்காதேவியை வழிபட தடைகள் எல்லாம் விலகும்.



புத்திசாலித்தனமாக செயல்படும் மிதுன ராசி அன்பர்களே. . !!



சூரியன் 07ல் இருப்பதால் உயர் அதிகாரிகள் பற்றிய புரிதல் ஏற்படும். பணி சார்ந்த விஷயங்களில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். சவாலான பணிகளையும் சாதாரணமாக செய்து முடிப்பீர்கள்.

செவ்வாய் 02ல் இருப்பதால் வாக்குறுதிகள் அளிப்பதை தவிர்ப்பது நல்லது. பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் ஏற்படும்.

புதன் 06ல் இருப்பதால் எளிதில் முடிய வேண்டிய பணிகளில் கூட உழைப்புகள் அதிகரிக்கும். வழக்குகளில் சாதகமான சூழல் ஏற்படும்.

01.01.2025 முதல் புதன் 07ல் இருப்பதால் புதுவிதமான இடங்களுக்கு சென்று வருவீர்கள். சுபகாரிய விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள்.

சுக்கிரன் 08ல் இருப்பதால் சில விஷயங்களில் அனுபவ அறிவை பயன்படுத்துவது மேன்மையை அளிக்கும். வெளி வட்டாரங்களில் பொறுமையை கடைபிடிக்கவும்.

30.12.2024 முதல் சுக்கிரன் 09ல் இருப்பதால் உயர்கல்வியில் புதுவிதமான அனுபவம் கிடைக்கும். புதிய விஷயங்களை கற்றுக் கொள்வீர்கள்.

குரு 12ல் இருப்பதால் இழுபறியான தனவரவுகள் கிடைக்கும்.

சனி 09ல் இருப்பதால் குடும்ப உறுப்பினர்களிடம் அனுசரித்து செல்லவும்.

ராகு 10ல் இருப்பதால் விலை உயர்ந்த பொருட்கள் மீதான எண்ணங்கள் அதிகரிக்கும்.

கேது 04ல் இருப்பதால் ஆடம்பரமான செலவுகளை குறைத்து கொள்ளவும்.

வழிபாடு: நரசிம்மர் வழிபாடு சிறப்பினை தரும்.



தாயுள்ளம் கொண்ட கடகராசி அன்பர்களே. . !!



சூரியன் 06ல் இருப்பதால் எதிர்பாராத தனவரவு உண்டாகும். மனதில் புதுவிதமான தெளிவுடன் காணப்படுவீர்கள். எதிராக இருந்தவர்களை வெற்றி கொள்வீர்கள்.

செவ்வாய் ராசியில் இருப்பதால் மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து செயல்படவும். மனதில் புதுவிதமான மாற்றங்கள் ஏற்படும்.

புதன் 05ல் இருப்பதால் இறை சார்ந்த பணிகளில் ஈடுபாடுகள் உண்டாகும். எதிலும் சிக்கனமாக செயல்படுவீர்கள்.

01.01.2025 முதல் புதன் 06ல் இருப்பதால் எதிர்பார்த்த வரவுகள் உண்டாகும். முக்கிய முடிவுகளில் நிதானம் வேண்டும்.

சுக்கிரன் 07 ல் இருப்பதால் பணிபுரியும் இடத்தில் மதிப்பும் செல்வாக்கும் அதிகரிக்கும். முன்னேற்றத்திற்கான நெளிவு சுழிவுகளை உணர்ந்து கொள்வீர்கள்.

30.12.2024 முதல் சுக்கிரன் 08ல் இருப்பதால் மனதில் இனம் புரியாத சில சிந்தனைகள் மூலம் குழப்பங்கள் ஏற்படும். இழுபறியான செயல்களை செய்து முடிப்பீர்கள்.

குரு 11ல் இருப்பதால் உயர்நிலைக் கல்வியில் முன்னேற்றம் ஏற்படும்.

சனி 8ல் இருப்பதால் வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும்.

ராகு 09ல் இருப்பதால் ஆராய்ச்சி சார்ந்த சிந்தனைகள் மனதில் அதிகரிக்கும்.

கேது 03ல் இருப்பதால் எதையும் தாங்கும் மனவலிமை உண்டாகும்.

வழிபாடு: ஆஞ்சநேயரை வழிபட தைரியம் பிறக்கும்.



எதிலும் தன்னிச்சையாக செயல்படும் சிம்ம ராசி அன்பர்களே. . !!



சூரியன் 05ல் இருப்பதால் எதிராக இருந்தவர்கள் கூட ஆதரவாக இருப்பார்கள். நாவல் சார்ந்த செயல்பாடுகளில் விருப்பம் உண்டாகும். சிந்தனைப் போக்கில் கவனம் வேண்டும்.

செவ்வாய் 12ல் இருப்பதால் எதிர்பாராத சில செலவுகளால் நெருக்கடிகள் உண்டாகும். வீட்டின் தேவைகளை அறிந்து நிறைவேற்றி வைப்பீர்கள்.

புதன் 04ல் இருப்பதால் நீண்ட நாள் நண்பர்களின் சந்திப்புகள் உருவாகும். மற்றவர்களால் உங்களிடத்தில் சில மாற்றங்கள் ஏற்படும்.

01.01.2025 முதல் புதன் 05ல் இருப்பதால் மனதில் வித்தியாசமான ஆசைகள் உண்டாகும். கலை சார்ந்த செயல்பாடுகளில் ஆர்வம் அதிகரிக்கும்.

சுக்கிரன் 06ல் இருப்பதால் வாழ்க்கைத் துணைவரை பற்றிய புரிதல்கள் மேம்படும். வாகனப் பழுதுகளை சீர் செய்வீர்கள்.

30.12.2024 முதல் சுக்கிரன் 07ல் இருப்பதால் கணவன்,மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். எதிராக செயல்பட்டவர்கள் விலகி செல்வார்கள்.

குரு 10ல் இருப்பதால் சமூக பணிகளில் பலதரப்பட்ட அனுபவம் ஏற்படும்.

சனி 07ல் இருப்பதால் அறிவு நுட்பத்தை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

ராகு 08ல் இருப்பதால் பணிகளில் முன்கோபம் இன்றி செயல்படவும்.

கேது 02ல் இருப்பதால் யாருக்கும் வாக்குறுதிகளை கொடுக்காதீர்கள்.

வழிபாடு:தட்சிணாமூர்த்தியை வழிபடுவதன் மூலம் நற்பலன்கள் அதிகரிக்கும்.



கனிவாக பழகும் குணம் கொண்ட கன்னி ராசி அன்பர்களே. . !!



சூரியன் 04ல் இருப்பதால் உறவினர்கள் பற்றிய புரிதல்கள் மேம்படும். அரசு தொடர்பான செயல்களில் அனுகூலம் ஏற்படும். எதிராக செயல்பட்டவர்கள் விலகிச் செல்வார்கள்.

செவ்வாய் 11ல் இருப்பதால் எதிராக இருந்தவர்களை சாதுரியமாக வெற்றி கொள்வீர்கள். உத்தியோக பணிகளில் உழைப்புகள் அதிகரிக்கும்.

புதன் 03ல் இருப்பதால் மாமனார் வழியில் ஒத்துழைப்புகள் ஏற்படும். செய்கின்ற முயற்சிகளில் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கும்.

01.01.2025 முதல் புதன் 04ல் இருப்பதால் கால்நடை தொடர்பான வியாபாரத்தில் லாபங்கள் மேம்படும். உறவினர்கள் மத்தியில் மதிப்புகள் உயரும்.

சுக்கிரன் 05ல் இருப்பதால் புதிய இலக்குகளை நிர்ணயம் செய்வீர்கள். கவின் கலைகள் மீதான ஆர்வம் உண்டாகும்.

30.12.2024 முதல் சுக்கிரன் 06ல் இருப்பதால் வெளியூர் பயணங்கள் அதிகரிக்கும். குழந்தைகள் வழியில் மகிழ்ச்சியான சூழ்நிலைகள் ஏற்படும்.

குரு 09ல் இருப்பதால் உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கும்.

சனி 06ல் இருப்பதால் பாதியில் நின்ற பணிகளை செய்து முடிப்பீர்கள்.

ராகு 07ல் இருப்பதால் மனைவி வழியில் ஒத்துழைப்பு ஏற்படும்.

கேது ராசியில் இருப்பதால் நீண்ட நேரம் கண் விழிப்பதைக் குறைத்துக் கொள்ளவும்.

வழிபாடு: மகாலட்சுமியை வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்.



எதிலும் துல்லியமாக செயல்படும் துலாம் ராசி அன்பர்களே. . !!



சூரியன் 03ல் இருப்பதால் சுப முயற்சிகள் கைகூடி வரும். சூழ்நிலைக்கு ஏற்ப தனது கருத்துக்களை முன் வைப்பீர்கள். மறதி தொடர்பான பிரச்சனைகள் குறையும்.

செவ்வாய் 10ல் இருப்பதால் கட்டுமான பணியில் இருந்துவந்த தாமதங்கள் குறையும். சுறுசுறுப்பாகச் செயல்பட்டு நினைத்ததை முடிப்பீர்கள்.

புதன் 02ல் இருப்பதால் நண்பர்களின் சந்திப்பு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும். புதிய பொருட்கள் மீதான ஆசைகள் அதிகரிக்கும்.

01.01.2025 முதல் புதன் 03ல் இருப்பதால் பழைய கடன் சார்ந்த பிரச்சனைகளை தீர்க்க உதவிகள் கிடைக்கும். மனதில் புது விதமான சிந்தனைகள் உருவாகும்.

சுக்கிரன் 04ல் இருப்பதால் தாய் வழியில் அனுசரித்து செல்லவும். எதிர்பார்த்த கடன் சார்ந்த உதவிகள் அமையும்.

30.12.2024 முதல் சுக்கிரன் 05ல் இருப்பதால் உடல் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும். வழக்கு சார்ந்த விஷயங்களில் சாதகமான சூழ்நிலைகள் அமையும்.

குரு 08ல் இருப்பதால் எண்ணிய சில வேலைகள் முடிவதில் அலைச்சல் உண்டாகும்.

சனி 05ல் இருப்பதால் சக ஊழியர்களிடத்தில் விட்டுக்கொடுத்து செயல்படவும்.

ராகு 06ல் இருப்பதால் பழக்க, வழக்கங்களில் மாற்றங்கள் காணப்படும்.

கேது 12ல் இருப்பதால் இறை சார்ந்த சிந்தனைகள் அதிகரிக்கும்.

வழிபாடு: பைரவரை வழிபட தடைகள் நீங்கி வெற்றி கிடைக்கும்.



சுறுசுறுப்பாக செயல்படும் விருச்சிக ராசி அன்பர்களே. . !!



சூரியன் 02ல் இருப்பதால் இதுவரை இருந்துவந்த குழப்பத்திலிருந்து வெளிவந்து தெளிவான சிந்தனைகளின் மூலம் முடிவுகளை எடுப்பீர்கள். நிதானமான பேச்சுக்கள் உங்கள் மீதான நம்பிக்கையை மேம்படுத்தும்.

செவ்வாய் 09ல் இருப்பதால் வாழ்க்கைத் துணைவருடன் சிறுதூரப் பயணங்கள் சென்று வருவீர்கள். கனிவான பேச்சுக்கள் உங்கள் மீதான நன்மதிப்பை ஏற்படுத்தும்.

புதன் ராசியில் இருப்பதால் பங்கு வர்த்தகம் தொடர்பான விஷயங்களில் சிந்தித்து முடிவெடுக்கவும். புதிய முயற்சிகளில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

01.01.2025 முதல் புதன் 02ல் இருப்பதால் விதண்டாவாத பேச்சுக்களை குறைத்துக் கொள்ளவும். விலையுயர்ந்த பொருட்களில் கவனம் வேண்டும்.

சுக்கிரன் 03ல் இருப்பதால் வியாபார பணிகளில் புதுமையான யுக்திகள் மூலம் மாற்றத்தை உருவாக்குவீர்கள். எதிர்பாராத சில உதவிகள் கிடைக்கும்.

30.12.2024 முதல் சுக்கிரன் 04ல் இருப்பதால் புதிய வேலை நிமித்தமான முயற்சிகள் கைகூடும். வாகன மாற்றம் சார்ந்த உதவிகள் சாதகமாகும்.

குரு 07ல் இருப்பதால் சகோதர வகையில் ஆதரவுகள் ஏற்படும்.

சனி 04ல் இருப்பதால் சமூகப் பணி தொடர்பான சிந்தனைகள் அதிகரிக்கும்.

ராகு 05ல் இருப்பதால் எண்ணிய காரியங்களில் எதிர்பார்த்த வெற்றிகள் கிடைக்கும்.

கேது 11ல் இருப்பதால் மூத்த உடன்பிறப்புகள் சாதகமாக செயல்படுவார்கள்.

.வழிபாடு: அர்தநாரீஸ்வரை வழிபட தம்பதிகளுக்குள் புரிதல் உண்டாகும்.



தர்மநெறிகளுக்கு உட்பட்டு செயல்படும் தனுசு ராசி அன்பர்களே. .



சூரியன் ராசியில் இருப்பதால் குடும்பத்தினருடன் அனுசரித்துச் செல்லவும். உடல் தோற்றத்தில் மாற்றம் ஏற்படும். பலம் மற்றும் பலவீனங்களை புரிந்து கொள்வீர்கள்.

செவ்வாய் 08ல் இருப்பதால் மற்றவர்களிடத்தில் விவாதங்களைத் தவிர்க்கவும். எளிதில் முடியும் என எதிர்பார்த்த சில பணிகள் அலைச்சலுக்கு பின்பு நிறைவேறும்.

புதன் 12ல் இருப்பதால் செயல்களில் ஆர்வமின்மை ஏற்படும். சுபகாரியம் தொடர்பான முயற்சிகள் கைகூடும்.

01.01.2025 முதல் புதன் ராசியில் இருப்பதால் கண்களில் இருந்துவந்த எரிச்சல்கள் குறையும். பழகும் விதங்களில் சில மாற்றங்கள் ஏற்படும்.

சுக்கிரன் 02ல் இருப்பதால் கனிவான பேச்சுக்களால் நன்மதிப்புகள் உருவாகும். இழுபறியான சில வரவுகள் கிடைக்கும்.

30.12.2024 முதல் சுக்கிரன் 03ல் இருப்பதால் உழைப்பிற்கு உண்டான பலன்கள் கிடைக்கும். பேச்சுக்களில் அனுபவ அறிவு வெளிப்படும்.

குரு 06ல் இருப்பதால் வழக்குகளில் பொறுமையுடன் செயல்படவும்.

சனி 03ல் இருப்பதால் புதிய தொழில்நுட்பம் சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபாடுகள் அதிகரிக்கும்.

ராகு 04ல் இருப்பதால் பாரம்பரியம் தொடர்பான செயல்பாடுகளில் ஆர்வமின்மை உண்டாகும்.

கேது 10ல் இருப்பதால் வெளிவட்டாரத்தில் மதிப்புகள் அதிகரிக்கும்.

வழிபாடு: சித்தர்களை வழிபட சித்த தெளிவு உண்டாகும்.



நிதானமாக செயல்பட்டு வெற்றி வாய்ப்புகளை உருவாக்கும் மகர ராசி அன்பர்களே..!!



சூரியன் 12ல் இருப்பதால் வெளியூர் தொடர்பான பயணங்கள் கைகூடும். உபரி வருமானம் தொடர்பான சிந்தனைகள் மேம்படும். சமூகத்திலிருந்து தனித்து இருப்பதற்கான சூழ்நிலைகள் அமையும்.

செவ்வாய் 07ல் இருப்பதால் உயர் அதிகாரிகளிடத்தில் அனுசரித்து செல்லவும். சுபகாரியப் பேச்சு வார்த்தைகள் கைகூடும்.

புதன் 11ல் இருப்பதால் மனதில் எண்ணியவை ஈடேறும். சேமிப்பு தொடர்பான சிந்தனைகள் மனதில் மேம்படும்.

01.01.2025 முதல் புதன் 12ல் இருப்பதால் மறைமுகமான சில விஷயங்களை புரிந்து கொள்வீர்கள். நீண்ட நாள் சந்திக்க நினைத்த நபர்களை சந்திப்பீர்கள்.

சுக்கிரன் ராசியில் இருப்பதால் எதிலும் தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். வீட்டின் தேவைகளை அறிந்து நிறைவேற்றி வைப்பீர்கள்.

30.12.2024 முதல் சுக்கிரன் 02ல் இருப்பதால் குடும்பத்தில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் குறையும். கலை சார்ந்த துறைகளில் ஈடுபாடும் முன்னேற்றமும் காணப்படும்.

குரு 05ல் இருப்பதால் பொழுதுபோக்கு தொடர்பான விஷயங்களில் ஈடுபாடு உண்டாகும்.

சனி 02ல் இருப்பதால் பார்வை தொடர்பான பிரச்சனைகள் குறையும்.

ராகு 03ல் இருப்பதால் சவாலான காரியங்களையும் திறமையுடன் செயல்பட்டு அனைவரின் பாராட்டுதல்களை பெறுவீர்கள்.

கேது 09ல் இருப்பதால் ஆன்மிகப் பெரியவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

வழிபாடு: மாரியம்மனை வழிபட மனஅமைதி உண்டாகும்.



சாணக்கியத்தனமாக செயல்படும் கும்ப ராசி அன்பர்களே. . !!



சூரியன் 11ல் இருப்பதால் மனதில் புதுவிதமான இலக்குகளை நிர்ணயம் செய்வீர்கள். துறை சார்ந்த சில நுட்பங்களை புரிந்து கொள்வீர்கள். ஆன்மிகம் தொடர்பான பணிகளில் ஈடுபாடு உண்டாகும். செவ்வாய் 06ல் இருப்பதால்செல்வச் சேர்க்கை தொடர்பான சிந்தனைகள் அதிகரிக்கும். புதிய விஷயங்களில் ஆர்வம் ஏற்படும்.

புதன் 10ல் இருப்பதால் கௌரவ பதவிகள் மூலம் செல்வாக்குகள் மேம்படும். எண்ணிய சில பணிகள் நினைத்தபடி நிறைவேறும்.

01.01.2025 முதல் புதன் 11ல் இருப்பதால் உடல் ஆரோக்கியத்தில் இருந்துவந்த இன்னல்கள் குறையும். சகோதர சகோதரிகளிடம் ஒற்றுமை அதிகரிக்கும்.

சுக்கிரன் 12ல் இருப்பதால் எதிர்பாராத சில பயணம் மூலம் மாற்றம் உண்டாகும். உணவு சார்ந்த செயல்பாடுகளில் கவனம் வேண்டும்.

30.12.2024 முதல் சுக்கிரன் ராசியில் இருப்பதால் உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்புகள் கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும்.

குரு 04ல் இருப்பதால் கல்வி தொடர்பான பணிகளில் முன்னேற்றம் ஏற்படும்.

சனி ராசியில் இருப்பதால் புதிய விஷயங்களை திட்டமிட்டு செயல்படுத்துவது நல்லது.

ராகு 02ல் இருப்பதால் பயணங்களின் மூலம் மாற்றமும், லாபமும் அதிகரிக்கும்.

கேது 08ல் இருப்பதால் குடும்ப உறுப்பினர்களிடம் அனுசரித்து செல்லவும்.

வழிபாடு: கன்னிமார்களை வழிபட குடும்பத்தில் ஒற்றுமை மேம்படும்.



புதுமைகளை விரும்பி செய்யும் மீன ராசி அன்பர்களே. . !!



சூரியன் 10ல் இருப்பதால் வியாபாரம் தொடர்பான பயணங்கள் கைகூடும். சபை நிமித்தமான பணிகளில் ஒத்துழைப்புகள் கிடைக்கும். உயர்கல்வியில் இருந்துவந்த குழப்பங்கள் குறையும்.

செவ்வாய் 05ல்இருப்பதால்ஆராய்ச்சி தொடர்பான கல்வியில்முன்னேற்றம் ஏற்படும். உணர்ச்சிப்பூர்வமாக செயல்படுவதை குறைத்துக் கொள்வது நல்லது.

புதன் 09ல் இருப்பதால் வியாபாரத்தில் புதிய முயற்சிகளுக்கு சாதகமான சூழல் ஏற்படும். ஆராய்ச்சி தொடர்பான கல்விகளில் முன்னேற்றமான வாய்ப்புகள் அமையும்.

01.01.2025 முதல் புதன் 10ல் இருப்பதால் அரசு தொடர்பான காரியங்களில் சிந்தித்து செயல்படவும். மருத்துவத்துறைகளில் முன்னேற்றமான வாய்ப்புகள் கிடைக்கும்.

சுக்கிரன் 11ல் இருப்பதால் புதுவிதமான பொருட்களின் மீது ஆர்வம் ஏற்படும். தந்தைவழி உறவுகள் மூலம் அனுகூலம் உண்டாகும்.

30.12.2024 முதல் சுக்கிரன் 12ல் இருப்பதால் மறைமுகமான வியாபாரங்கள் மூலம் ஆதாயம் அடைவீர்கள். அறிமுகம் இல்லாத புதிய சூழலில் இருப்பதற்கான வாய்ப்புகள் உருவாகும்.

குரு 03ல் இருப்பதால் விமர்சனப் பேச்சுக்கள் தோன்றி மறையும்.

சனி 12ல் இருப்பதால் தாழ்வு மனப்பான்மையால் ஒரு விதமான குழப்பங்கள் ஏற்படும்.

ராகு ராசியில் இருப்பதால் சிந்தனைத் திறனில் மாற்றம் ஏற்படும்.

கேது 07ல் இருப்பதால் பலதரப்பட்ட மக்களின் அறிமுகம் கிடைக்கும்.

வழிபாடு: வராக மூர்த்தியை வழிபட தொழில் முன்னேற்றம் ஏற்படும்.



உங்களுடைய
தொழில் மற்றும் பொருளை

நித்ரா காலண்டரில்

விளம்பரம் செய்ய

இங்கே கிளிக் செய்யுங்கள்